# டிப்ளோமா பரீட்சையிலும் தரப்படுத்தல்!

★ ★

பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 பங்குனி 23 ரபி ஆகி: 15 இதழ்-54
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 5 4-77

கொழும்பு,திங்கள் கல்வி டிப்ளோமா பரீட்சையில் தமிழ் மாணவர்களுக்குத்தரப் படுத்தல் கையாளப்பட்டதை ஆட்சேபித்து 7 தமிழ் டிப்ளோமா விரிவுரையாளர்கள் ராஜினாமாச் செய்துள்ளனர்.

## தமிழ் விரிவுரையாளர்கள் ஏழு பேர் ராஜினாமா

இப்பரீட்சையில் 350சிங்கள மாணவர்களும் 110 தமிழ் மாணவர்களும் தோற்றினர். இப்பரீட்சையில் முதல்தடவையாகத் தரப்படுத்தல் இடம் பெற்றுள்ளது.

பரீட்சை முடிவுகளை சிங்கள, தமிழ் மாணவர்கள் எனப் பிளவுபடுத்தி, பிரதிப் பதிவாளர்வாசித்தபோது,உளவியல், புள்ளியல் ஆகியவற்றில் தமிழ்மாணவர்கள் கூடுதல் புள்ளிகள் எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ் மாணவர்கள் ஒழுங்காக, கூடிய கருத்தரங்குகளில் கலந்துகொண்டதால், கூடிய புள்ளிகள் எடுத்தனர் என தமிழ்விரிவுரையாளர்கள் கூறினார்கள்.

ஒவ்வொரு பாடத்திலும் சிங்கள மாணவர்களுக்கு 5புள்ளிகள் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது. இந்தமுடிவு எடுக்கப்படும்கூட்டத்தில் தரப்படுத்தல்நடத்துவதா? என்பது பற்றிவாக்கெடுப்புநடந்தது. 14 சிங்கள ஆசிரியர்கள் ஆதரித்து வாக்களித்தனர். 7 தமிழ் விரிவுரையாளர்கள் இதனை ஆட்சேபித்து வெளிநடப்புச்செய்தார்கள்.

இதுபற்றி கல்விச் செயலாளர் டாக்டர் உடகம, உபவேந்தர் ஆகியவர்களுக்குப் புகார்செய்யப்பட்டது.

தரப்படுத்தல் செய்யுமாறு உப-வேந்தர் தான் அதிகாரம் தந்ததாக பதிவாளர் தெரிவித்தார். தபால்மூலம் அதிகா

(8-ம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி அரசு: எந்தவித நியாயமுமில்லை

# வடக்கு கிழக்கு சிங்கள ராஜ்யங்கள்

## பிரதமருக்கு சிங்கள இளைஞர் முன்னணி பகிரங்கக் கடிதம்

கொழும்பு,திங். தமிழுக்கு சமஅந்தஸ்து வழங்கப்படுவதற்கு எந்தவித நியாயமுமில்லை. அத்துடன் சமஷ்டி அரசு அமைக்கப்படுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவற்றை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு பகிரங்க கடிதம் எழுதுவதென இன்று பொரளை வை. எம். சி. ஏ. மண்டபத் நடைபெற்ற சிங்கள இளைஞர் முன்னணியின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புத்தபிக்கு ஒருவர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 8 புத்த பிக்குகளும், 4 யுவதிகளும், சுமார் 60 பேரும் கலந்துகொண்டனர்.

இவர்கள்பிரதமருக்கு எழுதவிருக்கும் பகிரங்க கடிதத்தின் சுருக்கம் வருமாறு;

தமிழுக்கு உரிமை கேட்பதில் தவறில்லை. அதேவேளையில் சிங்கள மொழியின் உரிமைகளையும் நாம் சிந்திக்க வேண்டும். 1956, 1960, 1970-ம் ஆண்டு காலங்களில் பண்டாரநாயக்கா அரசுகள் ஆட்சியில் இருந்த போது சிங்களம் அரசாங்க மொழியாக் கப்பட்டு, அதன் நடைமுறைகளும் திறம்பட செயலாற்றப் பட்டுள்ளது. அத்துடன் கடந்த 10 வருடகாலத்தில் சிங்கள மக்கள் இழந்திருந்த உரிமைகளை மீண்டும் பெறவும் அரசு சேவையாற்றியமைக்கு எமது நன்றி.

அதேவேளையில், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாநில சுயாட்சி கேட்கப்படும் போது சரித்திரத்தை நாம் தட்டிப்பார்ப்பது அவசியம். அக்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ராஜரட்டை, உருகுணாட்டை என்று பிரிக்கப்பட்டு சிங்களமன்னர் ஆட்சிசெய்தவுண்மையை எவராலும் மறுக்கமுடியாது. இதுஇப்படியிருக்க இப்பகுதி

8-ம் பக்கம் பார்க்க)

### கம்யூனிஸ்ட் (வடபிரதேச) கட்சியின் துணிச்சலான தீர்மானம்

# பிரதேச சுயாட்சி, தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயம்!

## உருவாகவிருக்கும் சோஸலிச முன்னணியும் ஏற்கும்?

(நமது அரசியல் நிருபர்)

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை அரசியல் வரலாற்றிலேயே புதியதொரு திருப்பம் ஏற்படுத்தக் கூடியவகையில் மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் மட்டுமல்லாது உருவாகவிருக்கும் இடதுசாரி ஐக்கிய சோஷலிஸ முன்னணிக்குமிடையில் ஒரு தேர்தல் உடன்படிக்கைக்கு முன்னோடியாக வழிவகுக்குமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

பிரதேச சுயாட்சி, தமிழ்ப் பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை, அவர்களை தேசிய இனமாக அங்கிகரித்தல் ஆகிய மூன்று அம்சத்திட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கிளை தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது,

கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக்கிளை நிறைவேற்றியுள்ள இந்தத்திர்மானம் ஓரளவுக்கு 1957-ம் ஆண்டில் கைச்சாத்தான பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஒத்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இத்தீர்மானம் தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் இலட்சியங்கள் சிலவற்றுக்கும் ஏற்றதாக இருப்பதாகவும் சமீப காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகரான திரு. வி. பொன்னம்பலம் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களுடனும் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர்களுடனும் நடாத்திவந்த பேச்சுவார்த்தைகளின் பயன்தான் இதற்குக் காரணமாக இருக்கலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் இத்தீர்மானத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் பிரதேச சுயாட்சி வழங்கப்படுமானால் பின்னர் ஒருகாலத்தில்தங்களுடைய உரிமையைத் தாமே தீர்மானித்துக்கொள்ளும் உரிமை அப்பகுதி மக்களுக்குக் கிடைக்கும். அதாவது தமிழர்விடுதலைக் கூட்டணியின் ''தமிழ்ஈழக் கோரிக்கை''யை இதன்மூலம் கம்யூனிஸ்ட்கட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ். மாநகர ப. நோ. கூ. சங்க

## ஊழியர் வியாழன் முதல் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், செவ் யாழ். மாநகர ப. நோ. கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

சகலஊழியர்களுக்கும்மாதச் சம்பளம் கொடுக்க வேண்டும் எனவும் நிரந்தர நியமனங்களை நியாயமாகச் செய்யும் படியும் பதவியுயர்வுகளை முறையாகச் செய்யுமாறும் நிர்வாகத்தை சீராக நடத்துமாறும் கோரியே மேற்படி சங்க ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் தாம் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தொழிற்சங்கக் காரியாலயத்தில் திரு. க. சண்முகராஜா தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளைக்குழுக்களைச் சேர்ந்த திருவாளர் ஆ. துரைராஜசிங்கம், ஆ. ஆனந்தராஜா, சி. இராசையா மற்றும் திரு. வி. எஸ். குணசிங்கம், திரு. எஸ். எஸ். மனோகரன் ஆகியோரும் உரையாற்றினர். (உ)

## ரயில் ஊழியர் வேலை நிறுத்தம் சில சேவைகள் பாதிப்பு

கொழும்பு, செவ் ரயில் ஊழியர்களில் ஒரு பகுதியினர் நேற்றிரவுமுதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் சில பகுதி ரயில் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றிரவு யாழ்ப்பாணத்திலிருந்து தபால் ரயில் கொழும்புக்கு வழமைபோல் புறப்பட்டுச் சென்றது.அதேபோல்

(8- ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### தேவை

சைவபரிபாலன சபையாரால் நடத்தப்படும் சைவப்பிரகாச அச்சியந்திரசாலைக்கு மனேஜர் தேவை. அச்சக நிர்வாகத்தில் அனுபவமுடையவர்கள் மாத்திரம் 20-4-77க்கு முன் செயலாளர், சைவபரிபாலனசபை, 450, காங்கேசன்துறைவீதி என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.
5861

பெண்பாலாருக்கு உடைதைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த பெண் டெயிலர் தேவை விண்ணப்பிக்கவும். எஸ். கே. எம். புக்பைண்டிங் வேக்ஸ் அன் இன்டஸ்ரீஸ், 10/1, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
5863

### FOR SALE

OLYMPIA DELUXE Portable Typewiter Almost new. Contact: The Tora Limited, 32, Kasturiar Road, Jaffna. Teleph: 7651.
5848

# சுகவீனத்திற்கு தீர்வுகாண கிருமிநாசினி பருகிய பெண்

சாவகச்சேரி, திங்கள்

சுகவீனத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத யுவதி ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார்

இச்சம்பவம் தாவளை-இயற்றாலை என்ற இடத்தில் நிகழ்ந்தது.

சிவகுரு செல்வமணி (வயது 21) என்னும் இந்த யுவதியின் மரணம் குறித்து சாவகச்சேரி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ஸி பாலகிருஷ்ணர் விசாரணை நடத்தினர்

தமக்கு அடிக்கடி ஏற்படும் சுகவீனத்தைத் தாங்கக்கொள்ளமுடியாது இவர்கிருமிநாசினி அருந்தியதாக சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இன்று சேவைநலம் பாராட்டுவிழா

மாவிட்டபுரம், திங்கள்

வலி-வடக்கு உதவிஅரசாங்க அதிபராகக் கடமையாற்றிஇடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள திரு. ந.அமிர்தசாகரன், யாழ். உதவிஅரசாங்க அதிபராகக் கட்மையாற்றி இளைப்பாறியுள்ள திரு. ஆ.கந்தையா ஆகியோரது சேவையைப்பாராட்டி சேவைநலம் பாராட்டு விழா ஒன்று நாளை தெல்லிப்பழை யூனியன்கல்லூரிமண்டபத்தில் நடைபெற உள்ளது.

வலி. வடக்குப்பகுதி கிராம அபிவிருத்திச்சங்கங்கள், மற்றும் சமூகசேவா மன்றங்கள் ஆகியவற்றின் ஆதரவில் நடைபெறும். இவ்விழாவுக்கு வலி. வடக்கு கிராமஅபிவிருத்திச்சங்கங்களின் சமாசத்தலைவர் பண்டிதர் வ. நடராசா தலைமை வகிப்பார்.

மேற்படி உத்தியோகத்தர்களைப் பாராட்டுவதுடன் வலி. வடக்குப் புதிய உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவாவை வரவேற்குமுகமாகவும் நடைபெறும் இவ்விழாவில் பலரது பாராட்டுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

## மூதறிஞர் சுகம்பெற பிரார்த்தனை

கல்வியங்காடு, திங்கள்

''இடதுசாரிக் கொள்கைகளைக்கொண்ட தலைவர்களே, தமிழர்கள்நடாத்தும்போராட்டம் நியாயமானது என்று கூறும் அளவிற்குப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் மூதறிஞரின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருப்பது நமதுதுரதிர்ஷ்டமே. மூதறிஞருக்கு இறைவன் விரைவில் நல்லசுகமளித்து எமது இனத்தைக் காப்பான்.''

இவ்வாறு நேற்றையதினம் நல்லை ஞானசம்பந்த ஆதீனத்தில் மூதறிஞர் திரு. செல்வநாயகத்தின் சுகம் வேண்டி நடைபெற்ற பிரார்த்தனை வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. ஆ.துரைராஜசிங்கம் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்தும் கூறியதாவது:

இக்கூட்டத்தில் உரையாற்றிய வண்ணை ஆனந்தன் உலகம் ஒரு பேரேட்டைவைத்துப் பற்று-வரவுக்கணக்கு வைத்தால் மக்கள் உலகத்திடம் நிறையக் கடன்பட்டிருக்கிறார்கள். வள்ளுவர், காந்தி முதலானபெரியார்களைப் போன்று தந்தை செல்வாவும் உலகிற்கு நிறையக்கடன் கொடுத்துள்ளார் என்று கூறினார். இக்கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம், பொன். மதிமுகராஜா, அ. குணராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

பழம்ரோட் பிள்ளையார் கோவிலிலும் தந்தையின் சுகம் வேண்டிப் பிரார்த்தனை செய்யப்பட்டது. இதில் 500க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். பிரார்த்தனையை அடுத்து 15ம்வட்டார தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் திரு. எஸ். சண்முகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. எம். ஆலாலசுந்தரம், வண்ணைஆனந்தன், சிவமகாராஜா, பொன். மதிமுகராசா எஸ். குணராஜா ஆகியோர் உரையாற்றினர். (அ)



## தவக்கால நற்சிந்தனை

''இந்த உலகத்தை கடவுளின் இராஜ்யமாகவும் அவருடைய நீதிக்கு உறைவிடமாகவும் செய்யுங்கள்; எல்லாம் உங்களுக்குத்தாமே கிடைக்கும்.''

இந்த வாக்கியத்தில் பொதிந்து கிடக்கும் உணர்ச்சியை அறிந்து போற்றி அதன்படி நீங்கள் செயல் முறையில் ஈடுபடுவீர்களாயின் கிறிஸ்து பெருமானுக்கும் வேறு எந்த மகாச்சாரியர்களுக்கும் உரிய இடம் எது என்று அறிய வேண்டிய அவசியமே இல்லை.'' (மாணவருக்கு)

கோடிக்கணக்கிலே பணத்தை அள்ளி வீசி வெள்ளித்திரைக்குப்படம் எடுக்கிறார்கள். படமும் வெளிவருகிறது. பல்லாயிரம் மக்கள் பார்க்கின்றனர். ஆனல் எல்லாரும் விரும்பினார்கள் என்று சொல்லிவிட முடியாது, அதுபோல எத்தனை மதங்கள் தோன்றினலும் அதை எத்தனை மதாச்சாரியர்கள் போதித்தாலும் ஒரு சில மதங்களும், ஒரு சில மதாச்சாரியர்களுமே மக்கள் மனதில் உலகப் பேரவையில் இடம் பெறுகின்றனர். அப்படி மக்கள் உள்ளங்களிலே நிலைத்து நிற்கும் மதம், கிறீஸ்து மதமே என்று காந்தியடிகள் உள்ளத் தூய்மையோடு திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

கிறீஸ்து பெருமான் தனக்காக இல்லாமல் மக்கள் நலத்திற்குப் பாடுபட்டார்; ஏழை எளியவர்களின் இழி நிலையைப் போக்கி, எழுச்சி மிக்க வாழ்வு வாழ்ந்து ஆன்ம இளைப்பாறுதலுக்குத் தங்களைத் தாங்களே சிர்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே தம் உயிரையே பலி கொடுத்தார்.

கிறிஸ்தவராக இருப்பவர்கள் கிறிஸ்துவின் வழியைப் பின்பற்றவில்லை என்றுல் அது தேமாங்கனியிருக்க, காஞ்சுரங்காயை உண்ணும் அறியாமைக்கு ஒப்பாகுமல்லவா.

—ஞானஒளி

# மங்கையர் ஏற்றிய மங்கல தீபம்

யாழ்ப்பாணம், செவ்.

''இன்று நாம் ஏற்றிவைக்கும் இந்தத் தீபம் சந்தான சௌபாக்கிய மங்கள கௌரி தீபம் எனப் பெயர் பெறும். இது பல தத்துவங்களை உள்ளடக்கியது. முப்பத்திரண்டு அறங்களை உணர்த்தும் முப்பத்திரண்டு தீபக்கால்களுடனும், பதினறு தீபக் கால்களை உணர்த்தும் பதினறு தீபக்கால்களும், அஷ்டலட்சுமிகளை நினைவூட்டும் எட்டுத் தீபக்கால்களும், நால்வகைப் புருஷார்த்தங்களையும் காட்டும் நான்கு தீபங்களும் கொண்ட அடுக்குகளை இதிற் காண்கின்றீர்கள். இவற்றுக்கு மேலாகத் திருவருளைக் குறித்து நிற்கும் உச்சித்தீபமும், சிவம்-சக்தியைப் பிரதிபலிக்கும் இரண்டு தீபங்களும் இதில் உள்ளன. பங்குனி மாதத்துக் கௌரி விரதத்தன்று கன்னியரும், சுமங்கலிகளும் இத்தீபத்தை ஏற்றி நோன்பிருந்து தேவியை அன்புடன் வழிபடுவார்களாயின் இஷ்டசித்திகளும் எய்தும்.''

இவ்வாறு நாயன்மார்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி (பேச்சி) யம்பாள் ஆலயத்தில் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) பேசுகையில் குறிப்பிட்டார். அவரும், அவரின் பாரியாரும் சந்தான சௌபாக்கிய மங்கள கௌரி தீபத்தை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். சி. சுப்பிரமணியம் அதன் உச்சித்தீபத்தை ஏற்ற, தொடர்ந்து சுமங்கலிகளும், கன்னிப் பெண்களும், வித்தியாசாலை மாணவியரும் தீபங்களை ஏற்றினர். மாணவமாணவியரின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெற்றது.

யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழக உப தலைவர் திரு. கா. இரகுநாதன் இத்தீபத்தைத் தமது மகன் வைத்திய கலாநிதி குகநாகதாசன் நினைவாக உபகரித்து இவ்வைபவத்திற் கலந்து கொண்ட அனைவர்க்கும் நன்றி கூறினார். மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும் உரையாற்றினர். (இ)

### கல்வியமைச்சு ஆதரவிலான

# சங்கீத, நடன, நாடகப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

கல்வி அமைச்சினல், நடாத்தப்படும் தமிழ்ப் பாடசாலைகளின் 1976-ம் ஆண்டுக்கான சங்கீத, நடன, நாடகப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

இப்போட்டி முடிவுகள் சில வருமாறு:-

கூட்டு பாட்டு (கீழ்ப்பிரிவு) கொக்குவில் இந்துக் கல்லூரி, மாத்தளை பாக்கிய வித்தியாசாலை, குருநாகல் இந்துத் தமிழ் வித்தியாசாலை.

ஆக்கப் பாடல் (கீழ்ப்பிரிவு) மட்டக்களப்பு-கல்லடி ஆர். கே. எம். பெண்கள் ம. வித்தியாலயம், மட்டக்களப்பு சிசிலியா கான்வென்ட், மன்னர்-வங்காலை மகாவித்தியாலயம்.

ஆக்கப் பாடல் (மேற்பிரிவு) மன்னர்-வங்காலை மகாவித்தியாலயம்.

நடனம் (மேற்பிரிவு) சுன்னுகம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலயம்.

நாட்டிய நாடகம் (கீழ்ப்பிரிவு) வல்வை மகளிர் வித்தியாலயம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம்.

பல்லியம் (கீழ்ப்பிரிவு) யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

நாடகம்: இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி.

நடனம் (கீழ்ப்பிரிவு) கொக்குவில் இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு சிசிலியா கான்வென்ட், இலுப்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்.

கூட்டுப் பாடல் (மேற்பிரிவு) யாழ். இந்து மகளிர் கல்லூரி, வவனியா தமிழ் மகாவித்தியாலயம், மாத்தளை இந்து மகா வித்தியாலயம்.

நாட்டிய நாடகம் (மேற்பிரிவு) பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

நாடகம் கீழ்ப்பிரிவு) பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், கண்டி- உலப்பன முஸ்லீம் மகாவித்தியாலயம். (உ)

......

## கௌரவம்

பண்டத்தரிப்பு, திங்கள்

மாதகல் பாணுவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரிஅம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தையொட்டி கடந்த பத்துத் தினங்களாக அபிராமியந்தாதி விரிவுரை நிகழ்த்திய சமயப்பிரசாரகர்ஆசிரியர் கே. நடராஜாவுக்கு மாதகல் இந்துமாமன்றத்தினர் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தனர்.

ஆலய பிரதம குருக்களான க. செல்லப்பாக்குருக்கள் இந்துமாமன்றத்தின் சார்பில் பொன்னுடையைப் போர்த்தினர். (உ)

...

## தெல்லிப்பழை வரத்தலம் பிள்ளையார் கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, செவ்.

தெல்லிப்பழை பன்னலை வரத்தலம் கற்பகப்பிள்ளையார் கோவில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. நேற்றுமுதல் இங்கு கிரியைகள் நடைபெற்றுவருகின்றன.

நாளை இரவு 7-30 மணி முதல் அருட்கவி சீ. விநாசித்தம்பி 'கைத்தலம் நிறைகனி' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். தொடர்ந்து சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'கும்பாபிஷேக மகிமை' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பியினல் பாடப்பெற்ற 'வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் திருபதிக வெளியீடு' நூலை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு வைப்பார். நாளை முற்பகல் இவ்வைபவம் நிகழும். (ஆ)

## பிரார்த்தனையும் பூசையும்

சாவகச்சேரி, திங்கள்

மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி.செல்வநாயகத்திற்கு பூரண சுகம்பெறவேண்டி மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலில் விசேஷ ஆராதனை அபிஷேகம் பூஜை என்பன நடைபெற்றன. (உ)

### கரவெட்டியில்

கரவெட்டி கிழக்கு அத்துளு ஸ்ரீமாநகர் கண்ணகை அம்மன் கோவிலிலும்மூதறிஞரின் நலம் வேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டது. (உ)

...—

## ராஜினமா

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி ப. நோ. கூ. ச. இயக்குநர் சபைத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ். பி. மயில்வாகனம் தம் தலைமைப்பதவியை ராஜினமாச் செய்துள்ளார். (உ)

## அறிவு நூல்கள்

சாய்ந்தமருது, திங்கள்

தம்பிலுவில் பொது நூலகத்திற்கென வாசகர்களின் நலன் கருதி அக்கரைப்பற்றுத் தென் பகுதிக்கிராமசபைத்தலைவர் திரு. என். தர்மலிங்கத்தின் முயற்சியினல் அதிகளவு அறிவு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ)

### இ. போ. ச.விளரின் நடவடிக்கை

சாய்ந்தமருது, திங்கள்

அம்பாறை மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவினர் சேவையில் ஈடுபடுத்தும் பஸ்களில் ஊர்களின் பெயர்களைத் தெளிவாகவும், தமிழுக்கு முக்கிய இடம் கொடுத்தும் எழுதியுள்ளனர். (உ)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல். ஈடு/13652

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி கபேரியல் இம்மனுவல்
வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் 1. வஸ்தியாம்பிள்ளை அருளானந்தம்
நவாலி 2. ருப்பியல் பேதுரு
எதிராளிகள்

ஈடு/13652-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க் காணும் ஆதனம் 1977-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27-ந் திகதி (27-4-77) புதன்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 2446-25 சதம். மேலும் இதில் 1500/- ரூபாவுக்கு 10-2-73 தொடக்கம் 22-11-73 வரை வருடமொன்றுக்கு 18% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 465-70 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும் இதில் 1100/- ரூபா கழித்து மிகுதி.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை வடக்கில் நீண்டகால ஆட்சியிலுள்ள ''கரையான் தோட்டம்'' நிலப்பரப்பு 1¼ கல்வீடும், கிணறும், பயிர்களும் இதற்கு எல்லை ஆதனங்கள். கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு சின்னத்தம்பி யோர்ச், மோசஸ் அந்தோனி, தெற்கு பூகோனப்பர் மனைவி திரேசம்மா. அதைச் சேர்ந்தவைகளுடன் முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்,
விலைமதிப்பாளர்,
ஏலவிற்பனையாளர்.

''இராசகிரி'',
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

5862

# ராஷ்டிரபதி மரணத்தில் மர்மம்! ராஜ்நாராயண் தகவல்!!

## இந்திராவுடன் அவருக்கு கருத்து மோதலும் இருந்ததாம்

புதுடில்லி.ஏப்.4

காலஞ்சென்ற இந்திய ஜனதிபதி ஜனாப்பக்ருதின் அலிஅகமத்தின் மரணம் குறித்து சில நம்பகமான மர்மத் தகவல்கள் இப்போது வெளிவந்துள்ளதாக இந்திய குடும்பக் கட்டுப்பாட்டு சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் தெரிவித்துள்ளார்.

கடந்த லோகசபைத் தேர்தலில் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைத் தோற்கடித்து முதல் தடவையாக மந்திரிப் பதவிஏற்றுள்ள திரு.ராஜ்நாராயண் ஜனாப் பக்ருதீன் அலிஅகமத்தின் மரணம் குறித்து மேலும் கூறியதாவது:

அவசரகாலநிலை பிரகடனம் குறித்து அப்போது பிரதமராக இருந்த திருமதி காந்திக்கும் ஜனாப் பக்ருதீன் அலிஅகமத்துக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது.

இவர்களிடையே இருந்த கருத்துவேறுபாடு குறித்து எவருமே கேட்காமல் இருக்க திருமதி காந்தி மறுப்புத் தெரிவித்து அறிக்கை விடுக்திருந்தார். எவருமே கேட்காமல் இருக்கக் கூடியதாக இருக்க திருமதி காந்தி மறுப்பு தெரிவித்து ஏன் அறிக்கை விட்டார் என்பதுதான் புதிராக உள்ளது.

ஜனாப் பக்ருதீன் அலிஅகமத்தின் அஞ்சலிக் கூட்டம் ஆட்சி மன்றத்தில் நடைபெற்ற போது திருமதி காந்தி அதற்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றும் திரு. ராஜ்நாராயண் குறிப்பிட்டுள்ளார். (இ)



## கூரை பிரித்து திருட்டு

யாழ்ப்பாணம், செவ்

அளவெட்டியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இரண்டாவது கிளைக்கூரை பிரிக்கப்பட்டு பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சம்பவதினம் இரவு மேற்படி கிளைக்குக் காவலாளராக கே. ஆறுமுகம் (வயது 70) இருந்தாராம்.

இரவு வேளை திருடர்கள் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கித் தம் கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனராம்.

இத்திருட்டு குறித்து சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் ஈ. ஏ. ஏ. காதர் தீவிரவிசாரணை நடத்துகிறார்.

இருவர் சந்தேகத்தின்பேரில் விசாரணைக் குட்படுத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். (உ)

## 'மிசா' கைதிகள் அனைவரும் விடுதலை!

புதுடில்லி, ஏப். 4

இந்தியாவில் 'மிசா' கைதிகளாக இருந்த சகலரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

இத்தகவலை இந்தியதொழில் துறை அமைச்சர் திரு. ரவீந்திரவர்மா தெரிவித்தார்.

தம்மைச் சந்தித்த 14 மத்தியப் பிரதேச சட்டசபை உறுப்பினர்களிடம் திரு. வர்மா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

## ஹிந்திமொழிக்கு உரிய இடம்!

### இந்திய வெளியுறவு அமைச்சர் உறுதி

புதுடில்லி, ஏப். 4

''ஹிந்திமொழி மக்களின் மொழி. இம்மொழிக்கு உரிய அந்தஸ்து அளிக்க நாம் தவற மாட்டோம். அதேவேளையில் சகல பிராந்திய மொழிகளுக்கும் பாதுகாப்புஅளிப்பதுடன் அவற்றின் வளர்ச்சிக்கும் அரசு உதவும்''.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாயி புதுடில்லியில் கூறினார்.

நாட்டில் நெருக்கடிநிலை மீண்டும் அனுமதிக்கப் படமாட்டாதென்றும் திரு.வாஜ்பாயி கூறினார். (இ)

......

## சூறவளிக்கு 600 பேர் பலி

டக்கா, ஏப். 4

பங்களாதேஷ் சூறவளிக்குப் பலியானோரின் தொகை 600 ஆக அதிகரித்துள்ளது

1,500 பேர் படுகாயமுற்றனர் என்றும் 30 ஆயிரம்பேர் வீடிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷின் தென்மேற்குப்பகுதியிலேயே இச்சூறவளி அதிக சேதத்தை விளைவித்ததாம். (இ)

## நாவலர் சரிதம் திரைக்கு வரப்போகிறது!

யாழ்ப்பாணம், செவ்,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வாழ்க்கைச் சரிதம் திரைப்படமாகவிருக்கிறது. யாழ். கலாமூவிஸார் பல லட்சம் ரூபா செலவில் பிரமாண்டமான முறையில் இதனைத் தயாரிக்கவிருக்கின்றனர். தேசியவீரர் என்ற வகையில் எடுக்கப்படும் இத்திரைப்படத்தின் பெயர் 'நல்லைநகர் நாவலர்' என்பதாகும். கதைவசனத்தைப் பிரபல எழுத்தாளர் 'சொக்கன்' எழுதுகிறார். இம்மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகுமென்றும் சிறந்த நடிக நடிகையினருக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை:மக்கள் உணர்ந்துவிட்டனர்

புதுடில்லி, ஏப். 4

ஜனநாயகத்தில் மக்களுக்கு இருந்த நம்பிக்கையை கடந்த லோக சபைத்தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டிவிட்டன

இவ்வாறு முன்னாள் ராஜ்ய சபை உறுப்பினரும் இப்போதைய லோகசபை உறுப்பினருமான திரு.சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார்.

ஜம்முவில்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. சுப்பிரமணியசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

நடந்துமுடிந்த தேர்தலின் மூலம் மக்கள் இந்திய ஜனநாயகத்தின் ஸ்திரத்தன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ)

## 'நேபாள—பாரத நட்புறவு மேலும் வலுப்படும்'

### நேபாள மன்னர் நம்பிக்கை

புதுடில்லி, ஏப். 4

''எமது விஜயம் நேபாளத்துக்கும், பாரதத்திற்கும் இடையேயான நட்புறவை மேலும்வலுப்படுத்தும்'' என்று நேபாள மன்னர் பிரேந்திரா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமது பாரத விஜயத்தை முடித்துக்கொண்டு மன்னரும் ராணியும் இன்றுவிமானமூலம் காட்மண்டு புறப்பட்டனர்.

இவர்களை பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாய் முதலானோர் விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தனர்.

தமது இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவு மேலும் வலுப்படுமென்று அந்நேரம் மன்னர் நம்பிக்கைதெரிவித்தார்.

மன்னரைக் கௌரவிக்கும் வகையில் பாரத தற்காலிக ஜனாதிபதி திரு. ஜட்டி கடந்த இரவு அவருக்கு விருந்து அளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவானும் மன்னர் சந்தித்து முப்பது நிமிடங்கள் வரை உரையாடினார். (உ)

## "சோவியத்துடன் பேச்சுவார்த்தை தொடரும்"

### கார்ட்டர் கூறுகிறார்

வாஷிங்டன், ஏப். 4

''அணு ஆயுதக் கட்டுப்பாடு உடன்படிக்கை தொடர்பாகச் சோவியத் யூனியனுடன் அமெரிக்கா தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தும்'' என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

மேற்படி உடன்படிக்கை பற்றி மாஸ்கோவில் கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே திரு. கார்ட்டர் இவ்வாறு கூறினார்.

இரு நாடுகளும் ஆயுதக் கட்டுப்பாடு உடன்படிக்கைசெய்து கொள்ளவேண்டியதன் அவசியத்தைச் சோவியத் யூனியன் காலக்கிரமத்தில் உணர்ந்து கொள்ளுமென்றும் திரு.கார்ட்டர் சொன்னார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்த விதம் பற்றி அமெரிக்காவில் கண்டனம் தெரிவிக்கப்படுவதாக வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

### சோவியத் காரணம்

இதேவேளை சோவியத் யூனியன் அமெரிக்கா மீது கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்வுடன்படிக்கை வெற்றி பெற அமெரிக்கா சாத்தியமாகக்கூடிய யோசனைகளை அமெரிக்கா தன் பேச்சுவார்த்தைகளின்போது தெரிவிக்கவில்லையென்று சோவியத் யூனியன் கூறியுள்ளது.

## தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலிலும்

# தி.மு.க. - ஜனதா கூட்டணி தொடர்ந்து இயங்கும்

### கருணாநிதி மீண்டும் நம்பிக்கை



சென்னை, ஏப். 4

தி. மு. க-ஜனதா - மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கூட்டணி தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலின்போதும் தொடர்ந்தியங்கும் என்ற அசையாத நம்பிக்கை தமக்குண்டென்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுபொதுக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்துகையிலேயே திரு. கருணாநிதி கூறினார்.

நடந்துமுடிந்த லோகசபைத் தேர்தலில் தி. மு. க- ஜனதா கூட்டணிக்கு சிறந்த வெற்றி கிடைக்கவில்லையாயினும் நமது லட்சியம், தேர்தலின்நோக்கம் நிறைவேறிவிட்டது என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

கடந்த லோகசபைத் தேர்தலின் மூலம் நாட்டில் சர்வாதிகாரம் முறியடிக்கப்பட்டு ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் திரு. கருணாநிதி கூறினார் (இ)

## மருதங்கேணி படுகொலை: மூவர் றிமாண்டில்!

சாவகச்சேரி, திங்கள்

மருதங்கேணி கொலைச் சம்பவம் தொடர்பாக மூவர் சந்தேகத்தின் பேரில் பளைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இம்மாதம் 11-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஞானமலர் (வயது 40) என்ற பெண்ணே கொலையுண்டவராவார்.

சம்பவதினம் சந்தேக நபர்கள் கொலையுண்டவரின் வீட்டிற்குள் புகுந்து கொலையுண்டவரையும் அவரது தாய் கண்மணியையும் விரட்டி விரட்டி உலக்கையாலும், பொல்லாலும் இரும்பு ஆயுதத்தாலும் தாக்கினராம்.

யாழ் பெரியாஸ்பத்திரியில்

(6-ம்பக்கம்பார்க்க)

எவர்சில்வர்
சமையல்
பாத்திரம்
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனீஸ்
ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்
லிமிட்டெட்
516, ஸ்கின்னேர்ஸ் றோட்
தெற்கு
கொழும்பு - 10

### மணிவாக்கு

உங்கள் செயல்களை எல்லாம் கடவுளுக்கு வழிபாடாக அர்ப்பணம் செய்துவிடுவதாயின், குடும்ப வாழ்க்கை உங்கள் பக்தி வாழ்க்கைக்குத் தடையாகவே இராது.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு
THE EELANADU

# குருகுலம்

யாழ்ப்பாணத்திலே இந்துசமயக் குருமார் பயிற்சிக்கான ஒரு குருகுலத்திற்கு அத்திவாரக்கல்லை நாட்டி வைத்து, கலாசார அமைச்சர் பேசிய பேச்சு, இந்நாட்டின் இந்து சமயச் சரித்திரத்தில் மிக முக்கியமான இடம் பெறும்.

நாடு பல நூற்றுண்டு காலமாக அந்நியர்களுக்கு அடிமைப்பட்டபோது இந்து ஆலயங்கள் பலவும் இடிக்கப்பட்டன. குருமார்களுக்கோ, குருமார் பயிற்சிக்கோ அரசாங்க ஆதரவு சிறிதுமில்லை. நாடு விடுதலை பெற்றபின் நிலைமை மெதுவாக மாறி மீண்டும் இந்து ஆலயங்கள் கட்டப்படுகின்றன. குருகுலப்பயிற்சிக்கான ஆதரவை இந்து மாமன்றம் மூலம் அரசாங்கம் அளித்து வருவதுடன், குருகுலக் கட்டடத்திற்கான செலவில் பாதியை அரசாங்கம் ஏற்க முன்வந்துள்ளதும் நல்ல அறிகுறி.

மத வேற்றுமைகளின்றி, எல்லாச் சமயங்களின் வளர்ச்சிக்கும் அரசு கூடிய உதவிகளைச் செய்யுமென்றும் அமைச்சர் கூறிய உறுதிமொழி வரவேற்கத் தக்கதாகும்.

வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத் துறை விளங்கவும் திருஞானசம்பந்த சுவாமிகள் சீர்காழியிலே உதித்தார்கள். அப்போது சைவத்திற்கு ஏற்பட்ட சோதனைகள் கொஞ்சமல்ல. நான்கு சமயக் குரவர்கள் தோன்றிச் சைவத்தைக் காத்தனர்.

பின்னர் மீண்டும், சரித்திர காரணங்களால், சைவ சமயத்திற்கு இடுக்கண்கள் பல ஏற்பட்டன. நாடு சுதந்திரம் பெறமுடிந்ததும் சைவ சமயத்திற்கான சோதனைகள் குறைந்து அது மறுபடி தலைதூக்கவும், அரசின் ஆதரவு கிடைக்கவும் முடிவது திருவருள் செயலேயாம்.

சமயத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனைகள் பலப்பலவாகும். அதிலும் சைவத்திற்கு உள்ள சங்கடங்கள் கொஞ்சமல்ல. மக்களுக்குச் சமய நம்பிக்கையில்லை. குருமார் பயிற்சி பெற்றதும், வாழ்க்கை நடத்தப் போதிய ஊதியம் கிடைக்குமா? சமூகத்திலே குருமார்களுக்குக் கவலையின்றித் தன்மானத்துடன் சீவியம் நடத்தமுடியுமா? என்ற சந்தேகங்கள் நீங்கவேண்டும். சம்பளத் திட்டம், பென்ஷன் முதலிய சட்டப் பாதுகாப்புகள் அவசியம் தேவை. இன்றேல், இந்தப் புதிய குருகுலத்திற்கும் மாணவர்கள் வந்து சேரத் தயங்குவர்.

வேறு வேலை எதுவும் கிடைக்காது, திறமையற்றவர்களே கோவிலில் மணி அடிக்கச் செல்லுவரென்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது. முறையாகப் பயிற்சி அளித்து, ஊதியப் பாதுகாப்பும், வேலை ஸ்திரமும் அளிப்பதாயின், திறமை உள்ளவர்கள் ஆவலுடன் குருகுலப் பயிற்சிபெற முன்வருவர். சைவ சமூகத்தின் மதிப்பும் கௌரவமும் உயருவதாகவும், நான்மறை அறங்கள் ஓங்கவும், நற்றவம் வேள்வி மல்கவும், மீண்டும் முடிவதாக இருக்கும். சமயம், சமூகத்திற்கு உண்மையில் பயனுள்ளதாக இருக்கவேண்டும்.

குருமார்கள் ஒழுக்கசீலர்களாகவும், சமயாசாரத்துடன் வாழ்பவராகவும் இருந்தால் சமூகத்தில் அவர்களுக்கு மேலான இடம் கிடைப்பதுடன், மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் அமோகமாகப் பெற முடியும்.

மக்களுக்கு நம்பிக்கையுடன் வழிகாட்டத்தக்க குருமார்கள் இல்லாத குறை நீங்கவும் மீண்டும் மேன்மை கொள் சைவ நீதி விளங்கி, குறைவிலாது உயிர்கள் வாழ, வழிபிறக்கவும் வேண்டும். அரசின் உதவி போதாது. சிறப்பாக இந்து சமய மக்களின் ஆதரவு கிடைத்தால் இந்த குருகுலம் மட்டுமல்ல, பல குருகுலங்கள் நாட்டில் ஆங்காங்கே ஏற்பட்டு, மக்களுக்குச் சமயத்தால் நன்மை ஏற்படவும், சிறப்பாக வாலிபர்களின் மனம் கோணல் வழிகளில் செல்லாமல், அவர்கள் வாழ்க்கை சீர்படவும் வழி பிறக்கும்.

## "கலையார்வத்தை வளர்க்கும் வாய்ப்பு"

யாழ்ப்பாணம், செவ்.

'எமது பாடசாலை மாணவர்களின் கலையார்வத்தைவெளிப்படுத்தவும், அதனை வளர்க்கவும் இவ்விதபோட்டிகள் உதவி புரிகின்றன' என்று கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கைத் தமிழ்ப்பாடசாலைகளுக்கிடையிலான சங்கீத, நடன, நாடகப்போட்டியில் பரிசளிப்புவிழாவில் தலைமையுரை நிகழ்த்துகையில் வடமாநில மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் கூறினார்.

'தேசிய ரீதியாக இசை, நடன, நாடகப் போட்டி யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக நடைபெறுவதற்கு ஏற்பாடுசெய்த கல்விஅமைச்சரும், செயலாளரும், மேலதிகச் செயலாளரும் பாராட்டுக்குரியவர்கள்' என்று அவர்மேலும் பேசுகையில் கூறினார்.

திருமதி சிவநாதன் சான்றிதழ்களை வழங்கினார்.

இரு தினங்களாக அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சகல போட்டிகளிலும் 33 பாடசாலைகள் பங்குபற்றின. (உ)

## கட்டாக்காலிகள் தொல்லை

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம், தொல்புரம், பொன்னாலை ஆகிய இடங்களிலுள்ள வயல்களில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகம் என்றும் சிறுதானியப் பயிர்களை அவை அழித்துவருவதாகவும் கமக்காரர்கள், கமத்தொழில் அதிகாரிகளிடமும், கிராமசபை அதிகாரியிடமும் புகார்செய்துள்ளனர்.

என்னும், பசுபோன்றபயிர்களே இக் கால்நடைகளால் பெரும் அழிவுக்குள்ளாகின்றனவாம். (உ)

# "வடக்கு - தெற்கு ஒற்றுமை சுபிட்சத்திற்கு வழிகோலும்"

## அமைச்சுச் செயலாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செவ்

"வடபகுதி-தென்பகுதி மக்களினது ஒற்றுமையின் மூலமே நாட்டில் சுபிட்சத்தைக் காண முடியும்" என்று யாழ். குருகுல கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் கல்வியமைச்சின் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால கூறினார்.

திரு. சுமதிபாலா தமதுரையில் மேலும் கூறியதாவது;

"எமது நாடு உணவு, உடை முதலியவற்றில் தன்னிறைவு பெறவேண்டுமானால் தென்பகுதிமக்களும் வடபகுதி மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம்தான் அதை செற்படுத்தலாம், இலங்கையின் சமீபகால வரலாற்றைப் பார்க்கின்ற போது நம் இன ஒற்றுமையின் போது முன்னேற்றமும் ஒற்றுமையில்லாத போது பின்தங்கிய நிலையும் காணப்படுகின்றது. இன்று இங்கு நிறுவப்பட்ட அத்திவாரக்கல் குருகுலத்தை வளர்க்க வைக்கப்பட்ட கல் மாத்திரமன்றி தமிழ்-சிங்கள ஒற்றுமைக்கு வைக்கப்பட்ட அத்திபாரக்கல்லாகும். இந்த நாட்டிலே இந்து மதத்தை வளர்க்க தக்க நிறுவனம் அத்தியாவசியமானது. தென்பகுதியில் இத்தகைய நிறுவனங்கள் செயற்பட்டு பௌத்த மதத்தைவளர்க்க அரும்பாடுபட்டு வருகின்ற இவ்வேளையில் இந்து மதத்திற்கென இத்தகைய தொரு நிறுவனம் இல்லாதது பெருங் குறையாகும் இந்த நிறுவனம் படிப்படியாக வளர்ந்து உலகம் போற்றும் நிறுவனமாகத்திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்"

### கைலாசபதி பேச்சு

யாழ். வளாகத் தலைவர்கலாநிதி க. கைலாசபதி பேசுகையில் "எமது நாட்டில் மட்டுமன்றி உலகின்ஏனைய நாடுகளிலும் இன்று உயர்மட்டககல்வியானது சமயச் சார்பற்றதாக விளங்குகின்றது, கல்வியின் ஆரம்பகாலங்களிலும் பின்னரும் தேவாலயங்களைப் பின்பற்றிய சமயசார்பான கல்வி முறையே இருந்து வந்தது. ஆனால் இன்று புதிய விஞ்ஞான வளர்ச்சியும் அரசியல் விழிப்புணர்வும் மக்களின் சிந்தனைசக்தித் திறனும் உயர் கல்வி சமயச் சார்பற்றனவாக நிகழ வைக்கின்றன எனினும் எமது மரபு முறையான கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பேணிக் காக்க சமயக் கல்வியை வளர்ப்பது அவசியமாகின்றது. பிராமணர்கள் அவர்களது மரபைப் பேண அவர்கள் ஆற்ற உணர்ந்து செயற்பட உதவுவது குருகுலமாகும் நீண்டகால பாரம்பரியத்தின் நிழலாகத் தெரிகின்ற இக்குருகுலம் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தமது சமயக் கல்வியில் பரிமாணத்தைப் பெற வேண்டியது அவசியம் என்று நான் கருதுகின்றேன் சமயக்கல்வியுடன் பௌதிகக் கல்வியையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம் உதாரணமாக எமது வளாகத்தில் இந்துக் கலாச்சாரத்துறை அமைந்துள்ளது. இன்று இக்குருகுலத்தில் பயிலும் மாணவர்கள் ஒரு காலத்தில் இவ்வளாகத்தால் பயனடைவார்கள் என நம்புகின்றேன். எனவே இக்குருகுல மாணவர்கள் பரந்த அறிவு கொண்டு திகழ இக்குருகுலம் ஆவன செய்ய வேண்டும்" என்றார்.

### நல்லூர் எம். பி. உரை

யாழ். மாவட்ட அரசியல் அதிகாரியும் நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. சி. அருளம்பலம் தமது உரையில் கூறியதாவது:

"அமைச்சர் இங்கு நிகழ்த்திய உரையின் போது குருகுல வளர்ச்சிக்கு எந்த உதவியையும் நான் செய்வேன் என்று கூறியது அவரது பரந்த நோக்கையும், பாரபட்சமற்ற தன்மையையும் காட்டுகின்றது. அவரது நல்ல உள்ளமும் நமக்குப்புரிகிறது. இக்குருகுலத்தினரின் ஆர்வத்தைமிஞ்சி அமைச்சர் இவ்விடயத்தில் ஆர்வம்கொண்டுள்ளார்" என்றார்.

(கல்வி-நி-உ)

### ஆசிரியருக்குக் கடிதம்:

## "பேச்சு வார்த்தைகள்"

'பேச்சுவார்த்தைகள்' என்ற தலைப்புடன் 'ஈழநாடு' பத்திரிகையில் வந்துள்ள தலையங்கத்தைப்படித்தேன். தாங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் பேச்சுவார்த்தைகள் அவசியம்தான். ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ளவும் மனமாற்றம் ஏற்படவும் அது உதவி செய்யும். ஆனால் பேச்சுவார்த்தைகளையும், தேர்தல்களையும் மட்டும் நாம் நம்பிக்கொண்டு இருப்பின் படிவில்லை. ஏமாற்றத்தில் முடியவும் கூடும்.

பிரிட்டனுடன் விடுதலைப் போராட்டத்தை அகிம்சா முறையில் நடத்திக்கொண்டிருந்த மகாத்மா காந்தி ஆக்க முறையில் திட்டம் தயாரித்து பொதுமக்களையும் சிறப்பாக பெண்களையும் ஈடுபடுத்தினர். 1. கதர், 2. தீண்டாமை ஒழிப்பு, 3. மதுவிலக்கு, 4. சமூக ஒற்றுமை. இதில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டதுடன் சமூகத்தின் வேலையில்லாக் கஷ்டம் குறையவும், மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படவும் உதவியது விடுதலைக்குப் பின்பும் உதவுகின்றன.

இன்று ஈழத்தில் தமிழர்களிடையே அரசியல்வாதிகளும், தலைவர்களும் தேர்தலிலும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டிருக்கையில், சிறப்பாக தமிழ்ப் பெண்களின் சக்தி பயனற்றுப்போகிறது. ஆண்கள் அரசியலில் ஈடுபடட்டும். பெண்கள் ஆக்கவேலைகளான கதர் துணி உற்பத்தி, மதுவிலக்கு, புகைத்தல் விலக்கு முதலியவற்றில் ஈடுபட்டால் அவர்களும் சும்மா இராமல், தமிழரின் உரிமைப்போரில் உருப்படியான பணிகளைச் செய்யமுடியும.

ஒரு. படித்த பெண்
உரும்பராய்.

## முகாமைச் சபையைக்கூட்டுக

வடமாநில கல்வித் திணைக்களக் கடன் வழங்கும் சபை அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. கடன் வழங்குவதை இடைநிறுத்திய காரணத்தால் ஏற்கனவே கடனுக்கு விண்ணப்பித்துக் காத்திருப்போர் எதுவிதநிவாரணமும் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இவ்வித இடை நிறுத்தம் பற்றிச் சபையின் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களாகிய எமக்கு எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடந்த ஆறு மாதங்களாக முகாமைச்சபை கூட்டப்படாமலிருப்பதால் அங்கத்தவர்களின் கஷ்டங்களை எப்படிப்போக்குவதென்று முடிவு செய்யமுடியாமலும் இருக்கின்றது.

கடந்த ஆறு மாதங்களின் பின் 30-3-77ல் முகாமைச் சபை கூட்டுவதாக இருந்தது தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இருபது பேரும் அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்தனர். கடன வழங்குசபை உறுப்பினர்கள் பருத்தித்துறை, தீவுப் பகுதி, பரந்தன்போன்ற தூர இடங்களிலிருந்தும் வந்திருந்தனர்.

அன்று கூட்டத்தைக் கூட்டிய தலைவர் வருகை தராமல் விட்டதால் கூட்டம் நடைபெற மாட்டாதென்று கடன் வழங்குசபைச் செயலாளரால் அறிவிக்கப்பட்டது.

கடந்த 6 மாதங்களாகக்கூட்டப்படாமலிருந்த முகாமைச் சபைக் கூட்டம் கூட இருந்த சந்தர்ப்பமும் கடைசிநரத்தில் இல்லாமல் போய்விட்டது கண்டு அங்கத்தவர்கள் வேதனையுடன் திரும்புவதாக எழுதிக்கையொப்பமிட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான எமக்கு ஆசிரியர்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர், கல்வித்திணைக்கள ஊழியர்கள் கஷ்டங்களை உணர்ந்து தீர்வுகாண கல்வி அதிபதி உடனடியாக முகாமைச்சபைக் கூட்டத்தைக் கூட்டி தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைப் பேசித் தீர்க்க முன் வரவேண்டுமென்று மிகு விநயமாக வேண்டிக் கொள்ளுகின்றேன்.

ந. சிவபாதம்
கடன் வழங்கும் சபை உறுப்பினர்

## திருமூர்த்திகளுக்கு அனுராதபுரத்தில் வரவேற்பு

யாழ்ப்பாணம், செவ்

பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயத்திற்கு உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீநடராஜப்பெருமான், சிவகாமியம்மன், மணிவாசகர் ஆகிய திருமூர்த்திகளுக்கு அனுராதபுரம் விவேகானந்த மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

வித்தியாலய வாயிலில் பூரண கும்பம் வைத்து, மகர தோரணங்களால் அலங்கரித்து மாணவ மாணவிகள் பக்தியுடன் பண்ணிசை பாட, திருமூர்த்திகள் அங்கு எழுந்தருளின. அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் மூர்த்திகளை வரவேற்றுப் பேசினார். பண்ணிசை வேந்தன் எஸ். ஆர். ஞானசம்பந்தன் திருமுறை ஓதினார். (அ)

• • •

## தெரிவு

சாய்ந்தமருது, திங்கள்

அண்மையில் அம்பாறை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இ. போ. ச. டிப்போக்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் அம்பாறை இ. போ. ச. டிப்போ 1-ம் இடத்தையும், மட்டுநகர் டிப்போ 2-ம் இடத்தையும், திருமலை டிப்போ 3-ம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

# ஆணவத்தை ஒதுக்கிவிட்டு கூட்டணியுடன் சேர்ந்து செயற்படுக: செய்த பாவத்திற்கு இது பரிகாரமாயிருக்கும்

## சுந்தரருக்கு ஓர் இளைஞர் வேண்டுகோள்

அன்பார்ந்த ஈழத்துப் பாட்டனுக்கு,

எண்பத்திரண்டு வயது நிரம்பிய பழுத்த பெரியவராகிய தங்களுக்கு முதுமை காரணமாகப் பல விஷயங்கள் நினைவிலிருந்து அகன்று வருவதாக எண்ணுகிறேன்.

தாங்கள் 77–3–12ஆம்திகதி 'ஈழநாடு' இதழில் திரு.இராசசிங்கம் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் "அந்த நாட்களில் (1948) யாராவது தனித்தமிழ் அரசாங்கம்,சிங்கள அரசாங்கம் என்ற நோக்கத்தைக் கனவிலும் எண்ணவில்லை" என்று கூறியிருக்கிறீர்கள்.

நான் பிறப்பதற்குப்பல நூற்றாண்டுகளுக்கு முந்திய விஷயங்களைக்கூடத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வமுடையவன். இதனால், மேலே குறிப்பிட்ட கூற்றில் ஏற்பட்ட சில ஐயங்களைத் தங்கள்மூலமாகத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன். 'ஈழம்: விடுதலைப் போரின் தொடக்கம்'' என்ற தங்களின் ஆங்கில நூலில் "என்னோடு கலந்துரையாடாது அருணாசலமோ,இராமநாதனோ ஜேம்ஸ்பீரிசோ மேற்கொண்ட எந்த நடவடிக்கையும் கிடையாது'' என்று தாங்கள்மிகுந்த பெருமையோடு கூறியுள்ளீர்கள். [Eylom: Beginings of Freedom Struggle-Page 58] அப்படியானால் சேர் பொன் அருணாசலம் அவர்கள் 1924ல் சிங்கள அரசியல்வாதிகளின் தமிழ்எதிர்ப்புச்சதியைக்கண்டு அவர்களிடமிருந்து விலகித் 'தமிழர்கழக'த்தைஆரம்பித்த போதுகூட அவர் தங்களோடு பேசியிருப்பார் என்பதுஉறுதி. "நம்முன்னோர் அளித்தஅருஞ் செல்வங்களைப் பெறுவதற்கு அருகதையுள்ள ஒரு மக்கட் கூட்டமாக வாழ்ந்து எமது தனித்தன்மையை அழியாது காக்க விரும்புகிறோம். இவ் வியக்கம்அரசியல்தேவையினால் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதன் உயிர்நாடி அரசியல் மட்டுமன்று. தமிழனைத் தமிழனாக்குகின்ற தலைசிறந்த இலட்சியங்களை உயிரோடு காத்து அவற்றை இலங்கை, தென்னிந்தியா, பர்மா, இரங்கூன், மலாயா,தென்னாபிரிக்கா முதலிய தமிழர் குடியேறிய நாடுகள் அனைத்திலும் பரப்பி தமிழகத்தின் ஒற்றுமையை தமிழ்நாட்டின் ஒன்றுபட்ட தன்மையை வளர்ப்பதேயாகும்'' என்று தமிழர்கழகத்தை ஆரம்பித்தபோது சேர் பொன் அருணாசலம் கூறினாரே, இது தங்களுக்குத் தெரியாதோ? இன்று நீங்கள் 'ஈழத்தமிழகம்' பற்றிப்பேசுகிறீர்கள். ஆனால் பெரியார்அருணாசலம் 'உலகத் தமிழகம்' பற்றியல்லவா கனவு கண்டார்?

### இந்தப் பழிக்குத் தாங்களே பொறுப்பு

பெரிய சேனநாயக்காவின் சகோதரர் எஃப். ஆர். சேனநாயக்கா தமதுசகோதரராகிய டீ. எஸ். ஐத் தங்களிடம் அடைக்கலந்தந்து, "டி. எஸ். சேனநாயக்காவின் அரசியற் கல்வி, அரசியற்றொழிற்பாடு ஆகிய அனைத்திலும் நண்பனாகவும், தத்துவஞானியாகவும், வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டதாகவும் "நான் நினைக்காத, ஆரம்பித்து வைக்காத, கற்பிக்காத எதனையும். டி. எஸ். சேனநாயக்கா அந்த நாளிற் செய்தது கிடையாது'' என்றும் தாங்கள் மேற்குறிப்பிட்ட நூலில் (பக் 58) குறிப்பிட்டிருக்கிறீர்களல்லவா? இந்த நாட்டில் இன்று அரசியல் அவிழ்க்க முடியாத பல முடிச்சாக இருப்பதற்குப் பெரிய சேனநாயக்காவே காரணம். தமிழர் இன்று அனுபவித்துவரும் கொடுமைகள் அனைத்துக்கும் காரணம் டி. எஸ். என்பதை எவரும் மறுக்க முடியாது. இன்னும் தெளிவாகச் சொன்னால் தமிழர் இன்று அடிமைகளாக இருப்பதற்குரிய முழுப் பொறுப்பும் பழியும் பாவமும் தங்களையே சார்கிறது.

இன்று ஒன்றுபட்டு நிற்கும் தமிழினத்துக்குச் சார்பாக சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரலெழுப்பி, விடுதலை பெற்றுத்தரவேண்டிய தாங்கள் தேர்தலிலே போட்டியிட வேண்டுமென்ற கீழ்த்தரமான நோக்கோடு பொறுப்பற்ற முறையில் சிங்கள அரசுக்குச் சார்பாக மக்களைப் பிளவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறீர்கள்.

1970 இல் தாங்கள் மூட்டிய சாதி, சமய வெறித்தீ 1975 தேர்தலில் கொழுந்துவிட்டெரிந்தது. "தனித்தமிழீழம்'' வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து தந்தை செல்வநாயகம் போட்டியிட்டார். தமிழனின் அடிமைத்தனத்தை மேலும் உறுதிசெய்யும் நோக்குடன் அரசின் சார்பில் திரு. வ. பொன்னம்பலம் போட்டியிட்டார். இதனால் திரு. வ. பொ. வின் ஆதரவாளர்கள் பலர் கூட்டணியை ஆதரித்தனர். எனினும் 1970 இல் பெற்றதைவிட அவர் 1000 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றார். தாங்கள் மூட்டிய சாதி வெறி காரணமாகவும் தங்கள் ஆதரவாளர்கள் பலர் வ.பொ. வை ஆதரித்ததினாலேயே இது நிகழ்ந்தது.

**விவாதமேடை**

### பொன்னம்பலம் எதிர்த்தார்

இத்தகைய தமிழர் எதிர்ப்புச் செயல்களுக்கு இன்றுமட்டுமல்ல என்றுமே தாங்கள் பெயர் பெற்றவர். தங்களாலும் அரசியல் வித்தகரான சோல்பரிப் பிரபுவாலும் உணர்ந்து கொள்ள முடியாத பல விஷயங்களை உணர்ந்து கொண்ட தலைவன் பொன்னம்பலம், சோல்பரி அரசியல் யாப்பை மூர்த்தண்ணியமாக எதிர்த்தார், சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டார். குடியேற்ற நாட்டு அமைச்சருக்கு, 'தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கோருகிறார்கள்' என்று தந்தியடித்தார். அன்று தாங்கள் தமிழருக்கு எதிராகச் சதி செய்திராவிட்டால், நாடு விடுதலை பெற்றிருக்காது. அல்லது தமிழர் தனிநாடு பெற்றிருப்பர். இதனை ஒப்புக் கொண்ட தாங்களே பின்வருமாறு எழுதியிருக்கிறீர்கள். "நான் அமைச்சரவையில் சேர்ந்திராவிட்டால் இலங்கையிலுள்ள இரு பேரினங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டிராது. ஒற்றுமை ஏற்பட்டிராவிட்டால் பிரித்தானியர் இலங்கைக்கு என்றுமே விடுதலை வழங்கியிரார்'' தாங்கள் செய்தது எத்துணை முட்டாள்தனம், எவ்வளவு பெரியதவறு 1954 இல் முதன் முதலாக தாங்கள் தான் தனிநாடுப் பிரேரணையை முன்மொழிந்ததாகவும் திரு. ஜி. ஜி அதனை வழிமொழிந்தார் என்றும் கூறியிருக்கிறீர்கள். அன்று மந்திரிப்பதவி என்ற மாயையிலே வீழ்ந்திடாது ஜி. ஜி யின் தலைமையிற் செயற்பட்டிருந்தால் இன்று எமது இனம் தலைநிமிர்ந்து நிற்குமே. தாங்களும் மகாதேவாவும் நடேசனும் அன்று முதுகிலே குத்தியிராவிட்டால் ஜி. ஜி. மனமுடைந்து தடம்மாற நேர்ந்திருக்காதல்லவா.

### ஜி. ஜி. யும் செல்வாவும்

தனிநாடு என்ற கருத்துணர்வு தங்கள் கணிதமூளையிலேதான் உதயமானதாகப் பெருமை பேசுகிறீர்கள். அகண்ட தமிழகம்வேண்டிய அருணாசலத்தின் (1924) பின் ஜி.ஜி. சுயநிர்ணய உரிமை (1047) கோரினார். அதே காலத்தில் அவருடன் இணைந்து செயற்பட திரு. செல்வநாயகமும், திரு வன்னியசிங்கமும் கூட தனிநாடு பற்றித் தங்கள் முன்னிலையில் ஆட்சிமன்றத்தில் சங்கநாதம் செய்திருக்கிறார்கள்.

"தமிழ் மக்களை அடக்கி அவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதுதான் பிரதமரின் நோக்கம். பொதுமக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கும் சிறுபான்மையினர்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கும் கொள்கை ரீதியில் வித்தியாசமில்லை. அடக்குமுறை எந்தவிதமான உருவத்திலிருந்தாலும் அதனை நாம் எதிர்க்கிறோம். இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கேட்கப்படும்போது அதே சுதந்திர உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுவதற்கு நியாயமில்லை. இலங்கையின் ஏனைய பாகங்களிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை தமிழ்மக்களுக்கு வேண்டும்''

திரு. செல்வநாயகம் ஆட்சிமன்றத்தில் (28–11–1947) இவ்வாறு ஆட்சிமன்றத்தில் முழங்கிய செல்வா, 1949 ஜூலை 12–ம் நாள் கொக்குவிலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் பேசினார். "எங்களது இயக்கம் தேசிய கௌரவத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு மட்டும் ஆரம்பிக்கப்பட்ட தொன்றல்ல. தனியரசு ஒன்றை உருவாக்கப்படுத்துவது எங்களது இலட்சியமாகும்'' இவையெல்லாம் முதுபெரும் கிழவராகிய தாங்கள் அறியாததா? அல்லது பூனை கண்ணைமூடிக்கொண்டால் பூமி இருண்டு போகும் என்று நினைக்கிறீர்களா?

### பச்சைப் பொய் சொல்கிறீர்கள்

"48ம் ஆண்டை அண்மிய காலப்பகுதியில் தனிநாடு பற்றி எவரும் கனவில்கூடக் காணவில்லை'' என்று தாங்கள் ஒரு படுபச்சைப் பொய்யை மக்கள் மன்றத்தில் உலாவ விட்டிருக்கிறீர்கள். பிரிவுறுத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் தனி நாட்டுப் பிரிவினை பற்றியும், இந்தியத் தமிழகத்துடன் கூட்டாட்சி அமைப்பது பற்றியும் பேசியபோது அதனைத் தாங்கள் வன்மையாகக் கண்டித்ததை மறந்துவிட்டீர்களா? அல்லது தெரிந்து கொண்டே மக்களை ஏமாற்றுகிறீர்களா? 28–11–47ல்ஆட்சிமன்றத்தில் தங்கள் மதிப்பிற்குரிய மாணவர் கு. வன்னியசிங்கம் பேசிய பேச்சைத் தங்களுக்கு நினைவூட்ட விழைகின்றேன். "இச்சபையின் மறுபக்கத்தில் இருக்கும் அங்கத்தவர்களைப் பொய்யாகப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி நான் இப்பொழுது குறிப்பிடுகிறேன். சமஷ்டி முறையும், தனி இராச்சியமுமே அதுவாகும். 'சமஷ்டி' 'பிரிவு' என்று கௌரவ வர்த்தக, வியாபார, அமைச்சர் (திரு. செ. சுந்தரலிங்கம்) திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தது எனக்கு ஞாபகமுண்டு. அவர் அதைப் பற்றிப் பயப்படுகிறார்'' ஐயா, ஒருவரும் தனிநாடு பற்றிக் கனவுகூடக் கண்டதில்லை என்கிறீர்கள் தாங்கள். ஆனால் தங்கள் மாணவரோ கனவிலும் நனவிலும் அதுபற்றித் தாங்கள் அஞ்சுவதாகக் கூறினாரே? யார் சொல்வது மெய்? தாங்கள் மாபெரும் மனிதராக இருந்தபோது நாம் கருவில் இருந்த பாவத்திற்காகவோ, அன்னையின் மடியிலே 'குவா குவா' ஒலித்ததற்காகவோ எங்களைத் தாங்கள் ஏமாற்ற முன்வரலாமா? 'அந்தக் காலத்தில் நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியாது' என்று தப்புக்கணக்குப் போட்டு, எம்மை மன்னிக்க முன்வந்த பெருந்தகைமைக்கு எமது நன்றி. முதுமை காரணமாக "ஆண்டு மாறி'ப் போனதால் தாங்கள் கூறும் முரண்பாடுகளை நாம் மன்னித்தோம்; மறந்தோம்.

தங்களுடைய கடிதத்திலே வரிக்குவரி ஆணவ முனைப்பைத்தான் காண்கிறோம் இதனைக் கொஞ்சம் ஒதுக்கிவைத்து விட்டுத் தமிழ் மக்களின் நன்மைக்காக –இதுவரை தாங்கள் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தமாகக் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவீர்களா?

போரன்
காங்கேசன்

---

# "பத்திரிகைத்துறை மூலப் பண்பாடு பரப்பும் ஆர்.என்.'

## வெள்ளி விழாவில் புகழ்மாலை

கல்வியங்காடு, திங்கள்

"காலத்தின் போக்கிற்கு ஏற்ப சமுதாயத்தை வழி நடத்துவது எளிதான காரியமல்ல அதிலும் சமயத்தைச் சார்ந்த பத்திரிகை ஒன்றை இக்கால இளம் தலைமுறையினரும் ஏற்கும் வகையில் வழிநடத்தி வழிகாட்டியாயத் திகழ்பவர் நம் சிவப்பிரகாசமாவார்கள்.''

இவ்வாறு 'இந்துசாதனம்' பத்திரிகை ஆசிரியாகக் கால் நூற்றாண்டு காலத்திற்குமேல் சைவப்பணியாற்றிவரும் நம சிவப்பிரகாசமவர்களின் சேவை நலன் பாராட்டி எடுக்கப்பட்ட வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.வளாகத் தலைவர் திரு.க.கைலாசபதி கூறினார்.

அவர் தொடர்ந்தும் தமதுரையில் கூறியதாவது. "கல்வியுடன் கலாச்சாரத்தையும், வரலாற்றையும் இணைத்துக் கொண்டு வாழ்பவர் சிவப்பிரகாசம் அவர்கள் இவர்பழம் பெரும் பத்திரிகையான இந்துசாதன இதழ் மூலம் பண்பாட்டையும், நாகரிகத்தையும் மக்கள் மத்தியில் வளர்த்து வருவதுடன் தானே அதற்கு சிறந்த உதாரணமாகவும் திகழ்பவர் தான் சார்ந்துள்ள பத்திரிகையை இந்துக்களுக்கு மட்டும் அறிவுபுகட்டும் கல்விச் சாதனமாக எண்ணாது அதன் மூலம் பலசிந்தனைகளைப் பரப்பி இந்துக்களுக்கு மாத்திரமன்றி ஏனையவர்களும் பயன் பெறத்தக்க வகையில் பணியாற்றுகின்றார்.

இவரது சிறந்த, ஆழ்ந்த அனுபவம் வாய்ந்த அறிவும், பரந்த அடைப்படையிலான பாரபட்சமற்ற கண்ணோட்டத்தில் பணியாற்றுவது கல்விக் கூடத்தைச் சார்ந்த எமக்கும் உறுதுணையளிக்கிறது. சமூகத்தை காலத்திற்கேற்ற வகையில் வழிநடத்துவது எளிதான காரியமல்ல தலைமுறை இடைவெளி உண்டு என்று கூறும் வண்ணம் கருத்துவேறுபாடு உண்டு ஆனால் சிவப்பிரகாசமவர்கள் காலத்திற் கேற்ற வகையில் இளம் தலைமுறையினரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து வருவதால் இன்று யாழ்வளாகத்தில் பணியாற்றுகின்ற பல இளம் விரிவுரையாளர்கள் அன்னாரது ஆக்கங்கள யாவற்றிற்கும் தமது பூரண ஆதரவைக் கொடுக்கின்றார்கள்.''

இவ்விழா நாவலர் சபை ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலனசபைத் தலைவர் திரு. ச.செல்வராஜா தலைமையில் நடைபெற்றது. விழா ஆரம்பத்தில் இந்துசாதனத்தில் 33 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.சபாபதிப்பிள்ளையின் திருவுருவப் படத்தை நீதியாசர் வி.சிவசுப்பிரமணியம் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்துப் பேசினார். அதைத் தொடர்ந்து நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீ லஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கி சிவப்பிரகாசமவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

ஆசியுரையைத் தொடர்ந்து திரு. கே.பி.ஹரன் உரையாற்றுகையில் மகாத்மாகாந்தியவர்கள் பத்திரிகையாளர்களைப்பாற்றி சொல்லிய ஒரு கருத்தை நான் இவ்வேளை குறிப்பிட விரும்புகின்றேன். அக்காலத்து மக்கள் வேதம் படித்தார்கள் அது அவர்களை வழிநடத்தியது ஆனால் இன்று பத்திரிகையாளர்களே மக்களை வழிநடத்துகின்றார்கள். பத்திரிகையாளர்களது பொறுப்பு மிகப் பெரிய பொறுப்பு அவர்களது பணி ஒப்பற்றது அப்படியான பொறுப்பும் சிறப்பும் உள்ள இன்றைய பத்திரிகையாளர்கள் சிலர் நடந்து கொள்கின்ற விதம் மனத்திற்கு வேதனையை கொடுக்கிறது ஆனால் காந்தியவர்கள் சொன்ன அத்தனை சிறப்பு அம்சங்களும், பொறுப்பும், கண்ணியமும் கொண்டவர் சிவப்பிரகாசமவார்'' என்றார். (உ)

......

## நிரந்தரக் கட்டடம் நிறுவுவர்

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி சங்க நிர்வாகசபை கூட்டத்தில்புதியகட்டடத்தை விரைவில் நிறுவுவதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு விசேடகுழு ஒன்று சங்கத்தலைவர் திரு. க. பத்மநாதன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தை நிறுவுவதற்குத் தேவையான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து பெறுவதற்குவட்டுக்கோட்டை எம் பி. திரு. ஆ. தியாகராசாவை நேரில் சந்தித்து கேட்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

## கட்டுவனில் கத்திக்குத்து

யாழ்ப்பாணம்,செவ்.

கட்டுவனில் நடைபெற்ற கத்திக்குத்துச் சம்பவமொன்றில் நாகராஜா என்பவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏ. சுந்தரலிங்கம் என்பவர் இன்ஸ்பெக்டர் ஜறைப் இ. ஏ. ஏ. காதரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுப் பிணையில் விடப்பட்டார்.

### குருநாகல் தேசிய ஒருமைப்பாட்டுக் கருத்தரங்கு:

# தொடர்ந்து ஏமாற்றப்பட்டதாலேயே "தனிநாடு" கோரிக்கை எழுந்தது

குருநாகல், திங்கள்

'தமிழர் கூட்டணியின் பிரிவினைக்கோஷத்தை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். பிரிவினை எத்தனிப்பின் பின்னால் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் பயங்கர சூழ்ச்சித்திட்டம் இருப்பதையும் காண்கிறோம்: ஆனாலும் தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகள் விவகாரத்தில் இத் தேசத்தில் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டதனாலேயே தமிழ் இளைஞர்கள் தனிநாடு என்ற கோரிக்கையை முன்வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதையும்உணர்கிறோம். எனவே தான் பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு உடனடியான ஜனநாயகத் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மேற்கண்டவாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. பிரேம்ஜி ஞானசுந்தரம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் குருநாகலைக் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டு குருணாகல் நகர மண்டபத்தில் நடத்தப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'குருநாகலைப் பிரதேச ஆசிரியர்களும், கல்விமான்களும். இளைஞர்களும், கூட்டுப்பண்ணை விவசாயிகளும் பெருந்தொகையாகக் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் தொடர்ந்துபேசும்போது திரு. பிரேம்ஜி கூறியதாவது:-

'இனங்களுக்கிடையிலான பிரச்னைகள் தீர்க்கப்படாதிருக்கும்வரை ஜனநாயகப்புரட்சியின் கடமைகள் நிறைவேற்றப்படுவதும், அனைத்து மக்களின் முற்போக்கு ஆதாயங்கள் பாதுகாக்கப்படுவதும்முடியாத காரியமாகும், பல்வேறு தேசிய இனங்களைச்சேர்ந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் பொதுவர்க்க நிறுவனங்களில் ஒன்றுதிரட்டப்படாமலிருக்கும்வரை சோஷலிஸப் புரட்சியோ, அதன்வெற்றியோ சோஷலிஸ நிர்மாணமோ வெறும் கற்பனையாகத்தான் இருக்கமுடியும். சோஷலிஸப் புரட்சியின் வெற்றியுடன்தான் தேசியஇனப்பிரச்னைக்கு உயர்ந்தவடிவத் தீர்வுகாண முடியும் என்றபோதிலும், சோஷலிஸ வடிவத்திற்கு முந்திய ஜனநாயகத்திற்குத் தீர்வு காண்பது சாத்தியமானதும் அவசர அவசியமானதுமாகும்.

## இனப்பிரச்னை தீர்ந்தால் மட்டுமே ஐக்கிய ஈழம் உருவாகும்

தேசிய இனப்பிரச்னைக்கு இத்தகைய தீர்வு காணப்பட வேண்டும் என்றே நாம் கோருகிறோம். இதனால்தான் தேசிய ஒருமைப்பாட்டை உறுதியான அடித்தளத்தில் உருவாக்க தமிழ்மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் அங்கீகரிக்கப்படவும் வேண்டும் என்ற கருத்தையும் இ.மு. எ. ச. ஏற்கனவே முன்வைத்தது.

'தமிழ் மக்கள் இத்தேசத்தின விடுதலைப்போரிலெல்லாம் என்றுமே முன்னணியில் நிற்கின்றார்கள். தேசிய காங்கிரஸின் நிறுவகர்களில் ஒருவரும், அதன் முதலாவது தலைவரும் ஒரு தமிழரான சேர். பொன். அருணாசலம்தான் என்பதை வரலாறு மறுக்கமுடியாது. அவரே இலங்கையின் முதலாவது தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்தவர் என்பதையும் எவரும் மறுக்கமுடியாது. முதலாவது இரத்த சாட்சிகளாகத் திகழ்ந்தவர்கள் கோவிந்தனதும் கந்தசாமியும் என்பதை மறைப்பதோ மறுப்பதோ அவர்களின ஆத்மாக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும். 1956ல் முற்போக்குச்சக்திகள் ஈட்டிய வெற்றிக்குத் தமிழ்மக்களின் கணிசமான பங்களிப்புச் செய்ததையும், 1960ல் பிற்போக்கு அரசை முறியடிக்கத் தமிழ்ப் பிரதிநிதிகள் உதவியதையும் 1960-ல் ஜூலையிலும் 1970லும் முற்போக்கு அணி ஜெயம்பெற தமிழ் மக்கள் துணை நின்றதையும் எவராலும் மறுக்கமுடியாது. சிலசுய நல அரசியல் தலைவர்கள் பின்பற்றிய சந்தர்ப்பவாத நிலையிலே தமிழ்ப் பிரச்னை தீர்க்கப்படாது இழுபறிப்படுவதற்குக் காரணம் என்பதும்மறுக்கப்படமுடியாததாகும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் தமிழ் இளைஞர்களின் மனநிலையை உணர்வது கடினமல்ல. எனவேதான் அவர்களையும் இணைத்து ஸ்திரமானதோர் ஐக்கிய ஈழத்தைக் கட்டிவளர்ப்பதற்குஉடனடியாக இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதும், பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதும் தேசிய, ஜனநாயக, முற்போக்குச் சக்திகளின் தவிர்க்கமுடியாத கடமையாகும்.'

இக்கருத்தரங்கில் இலங்கை ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர் சித்ரால் த பெரேரா, விமல் பர்ணாந்து, எஸ்.சிவகுருநாதன் உட்பட மேலும் பலர் உரையாற்றினர் (அ)

---

### மருந்துக்கும் மாறாத குருமன் நோய்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள குடியேற்றத் திட்டங்களிலும், படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்களிலும் உற்பத்திசெய்யப்பட்ட மிளகாய்ச் செடிகள் குருமன்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன,

செடி வளர்ந்து, காயும் பூவுமாக இருக்கும் நிலையிலும் சிறு பருவத்திலும் குருமன் நோய் இப்பகுதிகளில் வேகமாகப் பரவிவருகிறது.

சிபார்சுசெய்யப்பட்ட மருந்துகள் பாவிக்கப்பட்டும் நோய் மாறுவதாக இல்லை. (அ)

---

### சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

நெடுந்தீவு - நெழுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு 'அறிவுப் பொழில்' பத்திரிகை நிறுவனத்தினர் அகில இலங்கைத் திருப்புகழ் மாமன்றத்தின் ஆதரவுடன் சமய அறிவுப் போட்டியொன்றினை நடாத்தவுள்ளனர். (உ)

---

### மின்னலால் தாக்குண்டார்

சாய்ந்தமருது, திங்கள்

கல்முனைப் பகுதியில் ஏற்பட்ட இடிமின்னலால்சாய்ந்தமருது 1ம் பிரிவைச் சேர்ந்த 22 வயதுடையஇளைஞர்ஒருவர் தாக்குண்டு அபாயகரமான நிலையில் கல்முனை அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

---

### பிரதி அமைச்சருக்கு கறுப்புக்கொடி

சாய்ந்தமருது, திங்கள்

அண்மையில் அக்கரைப்பற்றுக்கும், காஞ்சிரங்குடாவுக்குமிடையிலான புதிய பஸ் சேவை, ஒன்றை ஆரம்பிக்க அக்கரைப்பற்றுச்சென்ற பிரதி நீதிஅமைச்சரும், நிந்தவூர் எம். பியுமான ஜனப். எம். எம். முஸ்தபாவுக்கு அங்கு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

பிரதியமைச்சருக்கெதிராக அக்கரைப்பற்றுநகரப்பிரதான வீதிகளில் தொங்கவிடப்பட்டிருந்த எதிர்ப்புச் சுலோக அட்டைகளையும், ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும் கறுப்புக் கொடிகளையும் பொலிசார் அகற்றினர். ஆயுதம்தாங்கிய பொலிசார் முக்கிய கேந்திரஸ்தானங்களைக் காவல்செய்துவந்தனர்.

பிரதி அமைச்சரினால் புதிய பஸ்சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டபின் பொதுக்கூட்டப் நடைபெற்றது. (அ)

---

## "சமுதாயம் இளைஞர்களையும், இளைஞர்கள் சமுதாயத்தையும் வழி நடத்த வேண்டும்"

— கலாநிதி, அ. சண்முகதாஸ்

கல்வியங்காடு, திங்.

'இளைஞர்கள் சமுதாயத்தை வழிநடத்தவேண்டும். சமுதாயம் இளைஞர்களை வழிநடத்த வேண்டும். அப்போதுதான் சமூகம்புதுமையுடனும் பொலிவுடனும் திகழமுடியும்''

இவ்வாறு கொக்குவில் கனிஷ்ட பல்தொழில் நுட்ப நிறுவன வணிக மாணவ மன்றத்தினரால் நடாத்தப்பட்ட வணிக விழாவில் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய யாழ். வளாகத்தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இளைஞர்கள் இருவகையிலே முன்னிற்பவர்கள் ஒன்று காதல், மற்றையது வீரம், இவற்றில் வீரம்சிறப்புடையது வீரர்களை வணங்குவது தமிழர்களது மரபாகும். இன்றைய இளைஞர்களின் எழுச்சியை நாம் பார்க்கின்றபோது விஞ்ஞான வளர்ச்சி ஒரு புதிய மாற்றத்தை இவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது. விஞ்ஞானமே இவர்களுக்கு சில சமயங்களில் விபரீதவிளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றது.

இன்றைய இளைஞர்கள் தங்களால் ஏற்படுத்தப்படுகின்ற சில முறைகளுக்குள் தாமே சிக்கிக்கொள்கின்றனர், இவர்களது இந்த நடவடிக்கைகளுக்கு என்ன காரணம் யாதெனஆராய முற்பட்டால், இந்த நாட்டில் மட்டுமல்ல ஏனைய உலக நாடுகளிலும் ஏற்பட்டுள்ள தலைமுறைப் பிறழ்வு அதாவது இளைஞர்களது பிடிவாதப்போக்கு, இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கிடையிலுமான கருத்து மாற்றங்கள், தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்காத தன்மையே காரணமாகும். முதியவர்கள் எதையும் சாவதானமாகஅவதானிக்கின்றார்கள் சாவதானமாகவே விலகிக்கொள்கிறார்கள் ஆனால் இளைஞர்கள் எவற்றிலும் ஒரு மாற்றத்தை, வேகத்தை ஏற்படுத்த முனைகிறார்கள் இவ்வாறான மாற்றங்களுக்கு நாம் தயாரா என்று சற்றுச் சிந்திக்கவேண்டும். இவர்களது இத்தகைய தீவிர போக்கிற்கும், விரக்தி மனப்பான்மைக்கும் இவர்கள்மத்தியில் காணப்படுகின்ற வேலைஇல்லாப் பிரச்சனை சமுதாய நிர்ப்பந்தங்கள் போன்றவைகளே காரணம் எனலாம், இவர்கள் முதிர்ந்த அனுபவம் பெறவேண்டும் என்பது வயதாலல்ல அறிவால் அனுபவம்பெறவேண்டும். சமுதாயம்இளைஞர்களைவழிநடத்த வேண்டும். சமுதாயத்தை இளைஞர்கள் வழிநடத்தவேண்டும். சமூகம் முன்னேற இளைஞர்கள் பணி அத்தியாவசியமானது அப்படிப் பணியாற்றுகின்றபோது அவர்கள் பழைமைகளையும் சற்றுத்தழுவவேண்டும். அதற்காக மூடநம்பிக்கைகளை நாம் ஏற்கவேண்டும் என்பதில்லை. இளைஞர்கள் பழைமையையும் புதுமையையும் கலந்து பணியாற்றவேண்டும்' என்றார்.

இவ்வணிக விழாவில் வெளியிடப்பட்ட வணிகமலரை தேவை அவர்கள் விமர்சனம் செய்தார் அவர் தமது விமர்சனத்தில் பத்திரிகையில் காணப்பட்ட குறைகளை வெகு வேடிக்கையுடன் சுட்டிக்காட்டினார். இவ்விழாவில் பரிசுபெற்றவர்களுக்கான பரிசுகளை திருமதி சி. டா. ஜெயசிங்கம் வழங்கினார். இறுதி நிகழ்ச்சியாக கல்லூரி மாணவர்களின் 'கேப்பியோ எலக்ஷன்' என்ற நகைச்சுவை நாடகம் இடம்பெற்றது.

---

### மருதங்கேணி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுஅங்குஞான மலரின் உயிர் பிரிந்தது.

கண்மணி தொடர்ந்து சிகிச்சை பெறுகிறார்.

சந்தேக நபர்களின் தந்தையைக் கொலையுண்ட பெண்ணின் சகோதரர் தாக்கியதாகவும் இதன் எதிரொலியாகவே இச்சம்பவம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. பாலகிருஷ்ணன் விசாரணை நடத்தினார். (உ)



# கிளிநொச்சி பகுதி மக்களுக்கு உரிமை வழங்கியது அரசு

## பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் அமைச்சர் சூரியர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இதுவரை கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் வாழும் உரிமை இல்லாதவர்களாகக் கணிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையை இப்போது எமது அரசு மாற்றியமைத்து இப்பகுதி மக்களுக்குச் சிறந்த சேவைகளைச் செய்துள்ளது. முன்னைய அரசின் காலத்தில இப்பகுதியில் உள்ள உழைப்பாளிகளது வருவாயை முதலாளிகளே சுரண்டிவந்தனர். இதனால் பாடுபடும் விவசாயிக்குப் போதிய பலன்இல்லாது இருந்தது. இன்று உண்மையான விவசாயிகளுக்குக் காணிகள் பங்கீடு செய்ததன் மூலம் இங்கு உற்பத்தியும் அதிகரித்தது. விவசாயிகளும் உரிமையுள்ளவர்களாக வாழ வழி வகுக்கப்பட்டது.

இவ்வாறு முழங்காவில் அரசினர்தமிழ்க்கலவன்பாடசாலை மண்டபததில் நடந்த கிளிநொச்சிப் பிரதேச அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் உரையாற்றிய தபால்தந்தி விடமைப்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தெரிவித்தார்.

பூநகரிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. குலநாயகம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அமைச்சர் குமாரசூரியர் தொடர்ந்து பேசுகையில்; கடந்த காலங்களில் கொழும்பிலும் மற்றும் பகுதிக்ளிலும் உள்ள முதலாளிகளுக்கு இப்பகுதியில்உள்ள காணிகள் ஏக்கர்க்கணக்காகவழங்கப்பட்டன. இதனால் இக்காணிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெளியில் உள்ள முதலாளிகளுக்கே சென்றன. இந்தநிலை இருந்ததால் உண்மையான விவசாயிகளின் நலன் வாழும் உரிமைகள் குறைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையை மாற்றியமைக்க எமது அரசு காணிகளை ஏழை விவசாயிகளுக்குப் பங்கீடுசெய்தது. இதனால் இன்று பாடுபடும் விவசாயிகளுக்குப் பொருளாதார சுதந்திரமும் தமது நிலத்திலேயே இருந்து உழைத்து உண்டுவாழும் உரிமையும் கிடைத்தது. சில முதலாளிகளுக்கு வியர்வைசிந்தி உழைத்துக்கொடுத்து கஷ்டப்பட்ட விவசாய மக்களுக்கு எமது அரசு காணிகளைக்கொடுத்து உதவிசெய்தது. இந்தநிலைமை மன்னாரிலும் இருக்கிறது இதையும் நான் மாற்றியமைக்க முயல்வேன்.

இப்பகுதியில் படித்த வாலிபர்களுக்குமட்டும்தான் காணி வழங்கப்படுகிறது. என்று இங்குள்ள ஏழை விவசாய இளைஞர்கள் குறைபடுகின்றனர். இப்பகுதியில் வாழ்ந்துவரும் படிப்புக் குறைந்த விவசாய இளைஞர்களுக்கும் காணிகள் வழங்க நடவடிக்கை எடுப்பேன். காணியில் வேலை செய்யத் தெரியாதவர்களுக்கு காணியைக் கொடுத்து, அக் காணியில் உற்பத்தி செய்யப்படாமல் நீண்ட காலம் காணி காடாகக் கிடப்பதைவிட காணி இல்லாத உழைப்பாளிகளான படிக்காத வாலிபர்களுக்கும் காணிகள் கொடுத்தால் அக்காணிகளே உடன் பயன்தரும் நிலங்களாக மாறிவிடும். கிளிநொசசிப் பிரதேச அபிவிருத்திசபை முழங்காவில் குழாய் கிணற்றுத் திட்டத்தில் விவசாயத் திட்டம் ஒன்றை அமைப்பதற்கு மூனறு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத் திட்டத்திலேதான் இன்று 100 பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்துள்ளோம். இத்திட்டம் வெற்றிபெற இத்திட்டத்தில் சேர்ந்துள்ள அனைவரும் முயற்சி எடுத்துப் பயன்பெற வேண்டும்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வேலைவாய்ப்புப் பெறுபவர்கள் இந்தப் பகுதியில் விசுவாசமுள்ளவர்களாகவும், இத்தொகுதியில் பற்றுள்ளவர்களாகவும் இருந்து இந்த மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். இப் பகுதியில் வந்து தங்களை முன்னேற்றிக்கொள்ளும் சிலர் இப் பகுதியையும் இப்பகுதி மக்களையும் மறந்து ஓடிவிடுகின்றனர். கிளிநொச்சித் தொகுதியில் நியமனம் பெறும் ஆசிரியர்கள் இரண்டு மாதம் கழிந்த பின் ஏதோ சாட்டுச் சொல்லி கொழும்பு, யாழ்ப்பாணம் போன் நகருக்குச் செல்ல முயல்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். இந்த மண்ணிலும் மக்களிலும் பற்றும் பாசமும் உள்ளவர்ளுக்கே இங்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இதுவரை இத்தொகுதியில் 30 பட்டதாரிகளுக்கு மேல் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இப்படியானவர்கள் இந்த பிரதேசத்தின் வளர்ச்சியிலும் நலனிலும் தமது பங்கைச் செலுத்த வேண்டும்.

[வண். நிருபர்]

## திறப்புக் கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் திரு. ப. நல்லசிவம் என்பவரால், திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (அ)

---

சாய்ந்தமருது, திங்கள்

சம்மாந்துறை - அம்பாறை வீதியில்நடைபெற்ற பஸ்-கார் மோதலில் 10 பேர் காயத்துக்குள்ளாகி ஆபாயகரமான நிலையில் மட்டக்களப்பு அரசினர் வைத்தியாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காரும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. (அ)

## இன்று காளிகா தேவி உற்சவாரம்பம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மல்லாகம் காளிகா தேவி ஆலய அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகி, தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

16-ம் திகதி பன்னிரண்டாவது தினத்தன்று பகல் சங்காபிஷேகமும், இரவு விசேட திருவிழாவும் அம்பிகை திருவுலாவும் நடைபெறவிருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலன இளைஞர் சங்கம் மேற்கொண்டுள்ளது. (உ)

---

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரியில் முதல்தடவையாக சமய சார்புள்ள மாணவர் மன்றங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இந்து, கிறிஸ்துவ முஸ்லிம் மாணவ மன்றங்களின் தேர்தல்கள் அடுத்த மாதம் நடைபெறுமெனத் தெரிய வருகிறது. (இ)

# சுதந்திரக் கட்சி

## மீண்டும் பதவிக்குவரும்

### இரத்நாயக்கா நம்பிக்கை

கொழும்பு, திங்கள்

''தீயசக்திகள் எமக்கு எதிராக பொய்ப்பிரசாரங்களைச் செய்து அரசுக்கு மாசு கற்பிக்க முயன்றாலும் நாம் மீண்டும் பதவிக்கு வருவோம் இதை எவருமே தவிர்க்க முடியாது''.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திரு. கே. பி. இரத்நாயக்கா பிலியந்தலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில்பேசுகையில் கூறினார்.

சோஷலிச சமுதாயம் ஒன்றை உருவாக்க பல திட்டங்களை மேற்கொண்டு தேர்தலை எதிர் நோக்கும் ஒரே ஒரு அரசு சுதந்திரக்கட்சி அரசாங்கமே என்றும் தெரிவித்த திரு. இரத்நாயக்கா, எந்த அரசுமே மேற்கொள்ளாதஅபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். ஆகவேதான் நாம் தேர்தலை எதிர் நோக்க அஞ்சவில்லை என்றும் கூறினார். (இ)

## துர்க்காதேவி பொங்கல்விழா

மாவிட்டபுரம், திங்கள்

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த பொங்கல்விழா எதிர் வரும் 12ம் திகதி நடைபெறவுள்ளது.

பங்குனி மாதத்தில் வரும் துர்க்காதேவிக்குரிய மிகச் சிறந்த வழிபாட்டுத்தினமாகிய இப்பொங்கல் தினத்தில் வழமைபோல் இம்முறையும் பொங்கல்விழாவை சிறப்புற நடத்த மேற்படிஆலய நிர்வாக சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்விழாவில் ஒதுவார் திரு. வி. ரி. வி. சுப்பிரமணியத்தின் திருமுறைப் பண்ணிசைச் கச்சேரியும் சிலநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன

இவ்விழாவில் பல பாகங்களிலிருந்தும்கூடும் பெருந்திரளான பக்தர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(உ)

## கருவாட்டுக் கொள்ளையில் இராணுவம் ஈடுபட்டதாம்

### அரசாங்க அதிபரிடம் புகார்

சுழிபுரம், திங்கள்

மீனவரின் கருவாட்டை இராணுவத்தினர் அபகரித்துக்சென்றதாக யாழ். அரசாங்க அதிபரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது: சுழிபுரம்-புளியந்துறையில் உள்ள மீன்பிடித்துறையில் காய வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை கருவாட்டை இராணுவத்தினர் ஜீப்பில் வந்து அங்கு நின்ற மீனவரிடம் அனுமதி பெறாமலே அள்ளிச் சென்றனராம். மீனவர்கள் அச்சம் காரணமாக பேசாதிருந்துவிட்டனராம்.

இதுபற்றிக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு மீன்பிடிச் சங்க முக்கிய நிர்வாகிகளில் ... சட்டத்தரணி திரு. கு. விநோதன் தலைமையிலான தூதுக்கோஷ்டியினர் சென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. ஏ. எல். விஜய பாலாவிடம் புகார் செய்தனர்.

பாதுகாப்பற்ற மீனவருக்கு தொடர்ந்தும் எவ்வித இன்னல் விளையாதவகையில் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்று இக்கோஷ்டியினர் அரசாங்க அதிபரிடம் கேட்டுக் கொண்டனர்.

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி -வைஜயந்திமாலா
தேன்நிலவு

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினரிசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன், பாரதி
தங்கத் தம்பி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா

REGAL (JAFFNA)
Daily at 10-30a.m. 2-30, 4-45, 7-00 & 9-30p.m. only
KENNETH HAIGH
NANETTE NEWMAN
in
MAN AT THE TOP
(Adults only) (Color)

RIO (Jaffna)
Daily 4 Shows
THE AGE OF GALLENTRY
ACTION PACKED COMEDY

ராஜா (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்—ஈ. வி. சரோஜா
நம்பியார்-எம். ஆர். ராதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
கொடுத்து வைத்தவள்

9-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வீரத் திருமகன்
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி,கே. ஆர்.விஜயா
[யாழ். நகர்] பத்மினி நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
இருமலர்கள்
(புதியபிரதி)

ராணி [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் லட்சுமி
நடித்த
கண்கண்ட தெய்வம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஃ சிவாஜி (இருவேடம்)
ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ஈழநாடு
The EELANADU

# மூதறிஞரைப் பார்க்க நாளை ஜே. ஆர். வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்வாய்
மூதறிஞர் செல்வாவுக்கு நேற்று முதல் தடவையாகக் குழாய் மூலம் 'சூப்' கொடுக்கப்பட்டது. தற்பொழுது நீர்ப் பதார்த்தங்கள் கூடுதலாக கொடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 13 தினங்களாக மூதறிஞர் மயக்கம் தெளியாத நிலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றார். தினமும் உடலில் சில அசைவுகளை மட்டுமே காண முடிகிறதாம்.

டாக்டர்கள் தொடர்ந்து இரவு பகலாகச் சிகிச்சை அளிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர் இன்னும் இருவாரத்திற்குப் பின்னரே படிப்படியாக மயக்கம் தெளியலாமென டாக்டர்கள் தெரிவித்தனர்.

தாமாகவே கைகால்களை அசைக்கும் நிலைமை இன்னும் ஏற்படவில்லையாம். கண் இமைகளைத் திறக்க முயற்சித்தபோதிலும் எதிரிலுள்ளவற்றைப் பார்க்கக்கூடிய நிலைமை இன்னும் ஏற்படவில்லையாம்.

ஆஸ்பத்திரியில் உள்ள பார்வையாளர் பதிவுப் புத்தகத்தில் தொடர்ந்து மக்கள் கையெழுத்திட்டு வருகின்றனர்.

நாளை ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மூதறிஞர் செல்வாவை நேரில் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வருகின்றார். (க-அ)

## காங்கிரஸ் ஆட்சியில்

# உள் - வெளி கொள்கையின்

## 'வங்குரோத்து'க்கு எடுத்துக்காட்டு!

### தேர்தல் முடிவு பற்றி மக்கள் தினசரி விமர்சனம்

பீக்கிங், ஏப். 4

உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள இந்தியப் பொதுத் தேர்தலில் 30 ஆண்டுகளாக ஆட்சி புரிந்து வந்த காங்கிரஸ் கட்சி அவமானத்துக்குரிய விதத்தில் தோற்கடிக்கப்பட்டு பிரதமர் திருமதி இந்திரா காந்தி பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். இக் குறிப்பிடதக்கமாற்றம் இந்திய துணைக்கண்டத்திலும் இந்து சமுத்திர நாடுகளிலும் புதிய சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு பீக்கிங் 'பீப்பிள்ஸ் டெய்லி' பத்திரிகை விமர்சித்துள்ளது.

இந்தியப் பொதுத் தேர்தலும் தெற்காசியாவில் சோவியத்யூனியனுக்கு ஏற்பட்டுள்ள தட்டுக்களும் என்ற தலைப்புடன் எழுதப்பட்டுள்ள அந்த விமர்சனத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவை அழிவுப்பாதைக்கு இட்டுச்சென்ற இந்திரா அரசாங்கத்தின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளே அந்த அரசாங்கத்தின் தோல்விக்குக் காரணமாகும். இத் தோல்வி தெற்காசியாவில் சோவியத் யூனியனின் விஸ்தரிப்புக் கொள்கைக்குஒருபேரடியாகும்.

உலகம் பூராவும் ஆக்கிரமிக்கும் தமது எதிர்ப்புரட்சிக்கு ஆதரவாக தெற்காசியாவின் கேந்திரஸ்தானமாக விளங்கும் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு சோவியத் யூனியன் பல காலமாக இந்திரா அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்துவந்தது.

'சமாதான நட்புறவு ஒத்துழைப்பு', ஒப்பந்தத்தின் பேரில் சோவியத்யூனியன் இந்தியாவுக்கு இராணுவ உதவிகளை வழங்கியதோடுஇராணுவ ஆலோசகர்களை இந்தியாவுக்கு அனுப்பியும் இந்திய இராணுவத்தலைவருக்கு ரஷ்யாவில் பயிற்சியும் அளித்துவந்துள்ளனர்.

பொதுத்தேர்தலின் போதும் இந்திராவின் ஆட்சியை நிலைக்கச்செய்ய சோவியத்யூனியன் திரிபுவாதிகள் காங்கிரஸ்கட்சிக்கு ஆதரவு அளித்துவந்தது. இந்திரா ஆட்சியின் சாதனைகள் பற்றி சோவியத்போற்றிப் புகழ்ந்து வந்தது.

காங்கிரஸிலிருந்து சிலர் ராஜினமாச் செய்வதையும் சோவியத் பத்திரிகைகள் கண்டனம் செய்தன.

இந்தியத் தேர்தல் முடிவுகள் இந்திரா அரசின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளின் வங்குரோத்து நிலையை மட்டும் காட்டவில்லை. தெற்காசியாவில் சோவியத் யூனியனின் மோசமான பாதிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே தெற்காசிய நாடுகளின் மக்கள் விழிப்புடனும் ஒற்றுமையுடனும் இருந்து தத்தம் நாட்டின் சுயாதீனத்தைக் காப்பாற்றவேண்டும்.' (இ)

# பெண் பிரதமர்கள் பற்றிய கருத்துக்கு

## லோகசபையில் பிரதமர் தேசாய் கவலை

புதுடில்லி, ஏப். 4

பெண் பிரதமர்கள் பற்றி இந்தியப் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் முன்பு வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் தொடர்பாக இன்று அவர் ஆட்சிமன்றத்தில் கவலை தெரிவித்துக் கொண்டார்.

பெண் பிரதமர்கள் பிசாசுகளைப்போல நடந்து கொள்கிறார்கள் என்று திரு. தேசாய் முன்பு கூறியிருந்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன. இச்செய்திகள்பற்றி இன்று லோகசபையில் பிரச்சினை கிளப்பப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் திருமதி பார்வதி கிருஷ்ணன் இது பற்றி சபையில் குறிப்பிட்டு இந்த விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தாம் கூறியகருத்துக்கள் பற்றியவிவகாரம் இப்பொழுது கிளப்பப்படுகின்றது என்றும் அந்தக்கருத்துக் குறித்து தாம் கவலைப்படுவதாகவும் பிரதம மந்திரி கூறினர். எதிர்காலத்தில் தாம் பெண்கள் பற்றிக் கருத்து வெளியிடுகையில் கவனமாக இருக்கப்போவதாகவும் திரு. தேசாய் சொன்னார். இதற்கு முன்னர் ராஜ்ய சபையிலும் இவ்வாறு அவர் கவலை தெரிவித்துக்கொண்டார்.

# ஆயுர்வேத சத்தியாக்கிரகம்: கைவிட மாணவர் இணக்கம்

## அருளம்பலம் எம். பி. தகவல்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் ஆயுள்வேத கல்லூரி மாணவர்களால் கைதடியில் நடாத்தப்பட்டு வரும் சத்தியாக்கிரகம் இன்று முதல் தற்காலிகமாக கைவிடப்படவிருப்பதாகத் தெரிகிறது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், நல்லூர் எம். பி. திரு. வி. அருளம்பலம், நாகவிகாரை பிரதம குரு வண. நந்தராமநாயக்க தேரோ ஆகியோர் நேற்று சத்தியாக்கிரக மாணவர்களைச் சந்தித்துப் பேசினர்.

மாவட்ட அரசியல் அதிகாரியும், நல்லூர் எம். பியுமான திரு. வி. அருளம்பலம் சுகாதார அமைச்சருடன் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் எடுத்துத் தருவதாக உறுதியளித்ததுடன், பேச்சுவார்த்தை முடியும்வரை சத்தியாக்கிரகத்தை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்கு மாணவர்கள் இணங்கியதாக திரு. அருளம்பலம் தெருவித்தார்.

ஆயுள்வேதக் கல்லூரி இயக்குனர் டாக்டர் தெங்காதரனும், நல்லூர் எம். பியும் இன்று சுகாதாரஅமைச்சரைச் சந்திக்கும் பொருட்டு கொழும்பு செல்வதென நேற்றைய சந்திப்பின் போது முடிவு செய்யப்பட்டதாம். (ஆ)

## ரயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்தும் தபால் ரயில் புறப்பட்டது.

இன்றுமுதல் கரையோரப் பகுதி சேவையும், குறுகிய தூரச் சேவையும் பாதிக்கப்படலாம். எல். பி. டி. சில்வா கமிஷனின் சம்பள உயர்வு யோசனையை அமுல் நடத்துமாறு இந்த வேலை நிறுத்தம் நடக்கிறதாம். (ம-ஆ)

## பிரதேச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

பிரதேச சுயாட்சியையும் தமிழ்மக்களின் சுயநிர்ணயஉரிமைக் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டதன்மூலம் திட்டமிட்ட குடியேற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வழிவகுக்குமென்றும் கருதப்படுகிறது.

## டிப்ளோமா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரம் தரப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனல் அக்கடிதம் பையில் இருக்கவில்லை.

தரப்படுத்தலுக்குத் தாங்கள் உடந்தையில்லை என பரீட்சைத்தாள்களில் 7 தமிழ் விரிவுரையாளர்களும் எழுத அனுமதி வழங்கப்பட்டது.

2 கிழமையால் கற்பித்தல் பரீட்சை முடிவுகள் வெளியாகின. இப்பாடத்தில் (பி÷) 65 புள்ளிகள் பெற்ற தமிழ் மாணவர்களுக்கு 50 புள்ளிகளாகக் குறைக்கப்பட்டிருந்தது. இதனல் பல தமிழ்மாணவர்கள் விசேடசித்திபெறமுடியாமல் போய்விட்டது.எம்.ஏ பரீட்சை எடுக்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

ராஜினமாவை வாபஸ்பெறுமாறு7 தமிழ்விரிவுரையாளர்களுக்கும் பிரதிப்பதிவாளர் கடிதம் அனுப்பியிருக்கின்றார்.

## இந்தப் பொருட்களும் விலைகுறைந்தது!

கொழும்பு, செவ்.

இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களும் 10 சத வீதம் விலை குறைக்கப்பட்டுள்ளது. உடனடியாக விலைகுறைப்பு அமுலுக்கு வந்துள்ளது.

நிதிஉணவு கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்தியபேச்சுவார்த்தையின்போது இதற்குஇணக்கம் ஏற்பட்டது.

அத்துடன் அப்பியாசக்கொப்பிகளின் விலைகளும் குறைக்கப்படுகிறது. இதுவரை 40சதமாக விற்கப்பட்ட 40 பக்க அப்பியாசக்கொப்பி இன்று முதல் 30 சதமாக இருக்கும்.

70 சதமாக விற்கப்பட்ட 80 பக்கக் கொப்பி 55 சதமாகவும், 4 ரூபா 20 சதமாக விற்கப்பட்ட 320 பக்க மொனிற்றேஸ் கொப்பி 3 ரூபா 22 சதமாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது. (ஆ)

## சமஷ்டி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எப்படி தமிழருக்குச் சொந்தமாக முடியும்?

இப்பகுதிகளில் சிங்களவரும் வாழ்கின்றார்கள், அப்படியிருக்க அங்கு தமிழ்மொழி மட்டும் உபயோகத்தை தமிழர் விடுதலைக்கூட்டணியினர் எப்படிக் கேட்கமுடியும்.

அதுமட்டுமல்ல தேசியவாதிகள் என்று கூறிக்கொள்ளும் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி, ஜனப் எம். சி. எம். கலீம் ஆகியோர் அரசுக்குச் சமர்ப்பித்த 20 அம்சத் திட்டத்திலும்கூட ஒரு இடத்தில் 'தனிராஜ்யம்' வருகிறது. இதனையும் நாம் கண்டிக்கிறோம்.

மாவட்டசபை, ஐம்பதுக்கு ஐம்பது, தமிழுக்கு சமஅந்தஸ்து போன்ற கோரிக்கைகள் ஏற்கனவே பலதடவைகளில் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இவற்றை இந்த அரசு புதுப்பிப்பது நல்லதல்ல. இதனை நாம் கண்டிக்கிறோம். என்றிவ்வாறு அந்தப் பகிரங்கக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு தரப்படுத்தல் மூலம் மாணவர்களைத் தெரிவுசெய்தல் போன்ற திட்டத்தையும் தொடர்ந்து அமுல் நடத்துவதன்மூலம் பெரும்பான்மை இனமான சிங்கள மாணவர்களுக்கு அதிக வாய்ப்பளிக்க முடியும் என்றும் சிறுபான்மையினரின் கூப்பாடுகளுக்கு செவிமடுத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை நிறுத்திக்கொள்ளுமாறும் அரசாங்கத்தைக்கொண்டு செலுத்த முடியாவிட்டால் வேறு ஒரு பிரதமரைத் தங்களால் நியமிக்க முடியுமென்றும் இக்கூட்டத்தில் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். (ம-ஆ)

## மரண அறிவித்தல்

### குப்பிழான் குட்டித்தம்பி பொன்னம்பலம்.

முன்னாள் மல்லாகம் இந்துக்கல்லூரி ஆசிரியரும், குப்பிழான் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவருமாகிய குட்டித்தம்பி பொன்னம்பலம் காலமானார். இவர் ஆசிரியர் சிவலிங்கம் (ஆங்கில மகாவித்தியாலயம், புன்னலைக்கட்டுவன்) மகாலிங்கம் (வைத்திய அதிகாரி எருக்கலம்பிட்டி) ஆகியோரின் அன்புத்தந்தையும். திருமதிகள் இராசமணி சிவலிங்கம் (ஆசிரியை இந்துக் கல்லூரி உரும்பராய்) திருமலர்தேவி மகாலிங்கம் ஆகியோரின் மாமனாரும். மஞ்சுளாதேவி, மாலினிதேவி, அன்னராசா, இந்திராதேவி, விவேகானந்தன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் குப்பிழான் காடாகரம்பை மயானத்தில் இன்று (5—4—77) மாலை 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்: லிங்கம்சகோதரர்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.